JL
m211, N32NV.
N32.1.9
177174

Registered No. M. 1500.  "NAVASAKTI"

# நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'   'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கஉ   1932ஆ செப்டம்பர்   பரல் உஎ

உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திருமால் அருள் வேட்டல் ... ... | சுக |
| சமரச சன்மார்க்க போதம் ... ... | சரு |
| சிவநெறி விளக்கம் ... ... ... | சகூ |
| சுந்தர சுலோசனை ... ... ... | ருரு |
| தமிழ்நாட்டுக்கு ஒரு வேண்டுகோள் ... ... | கஉ |
| ஐரோப்பிய போர்ட் (Ford) ... ... | கரு |
| அரும் உலோகங்கள் ... ... ... | கறு |
| மெய்யின்பத் துறைகள் ... ... ... | கூஅ |
| இடியேறு ... ... ... | எரு |


வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0.   வெளிநாடு ரூபா 4.

# பெரிய புராணம்

## மூலமும்

## அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

## வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகிறது

**ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !**

*சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.*

*இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்களும் எளிதில் வாங்கிப் பயன் பெறும் பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பு, டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.*

*அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.*

*முழுப் புத்தகம் சுமார் 20 சஞ்சிகையில் முடிவு பெறக்கூடும். புத்தகம் முடிந்தபின் விலை ரூபா 5-க்கு மேல் ஆகலாம்.*

### சந்தா விவரம்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| மாதச் சஞ்சிகை யொன்று தபாற் செலவுடன் | .... | 0 | 4 | 6 |
| புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை | .... | 4 | 0 | 0 |
| வெளியூர்—தபாற் செலவுடன் | .... | 4 | 8 | 0 |

*6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.*

---

பெரியபுராண சந்தாதாரர்கட்கு

## அறிவிப்பு

*புத்தகம் முழுவதற்கும் 1932-ம் ஞு ஆகஸ்டுமீ இறுதிக்குள் சென்னையிலுள்ளவர்கள் ரூபா 3-8-0-ம் வெளியூரார் ரூபா 4-0-0-ம் முன் பணம் செலுத்த வேண்டுமென முன்னம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; செப்டம்பர் மாதம் வரை சஞ்சிகைகள் நான்கு வெளிவந்து விட்டன. ஆகவே, இப்பொழுது முன்பணக் கட்டணம், சென்னைக்கு 4 ரூபாயாகவும், வெளியூருக்கு 4½-ரூபாயாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.*

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

---

# நவசக்தி

சிலம்பு [illegible] ஆங்கீரஸ ஞு புரட்டாசி மீ [illegible] பரல் [illegible]

## திருமால் அருள்வேட்டல்

தென்திருப்[illegible]

போரை அரைசே! போரை அ[illegible]
பெரிதுதின் [illegible] பெரிதுதி[illegible]
[illegible]
விண்ணெலாம் ஆட்சி மண்ணெ[illegible]
கடலெலாம் ஆட்சி காற்றெ[illegible]
ஒளியெலாம் ஆட்சி ஒலியெ[illegible]
சிறியதிற் சிறிதினும் பெரியதி[illegible]
ஆட்சி நினதே ஆட்சி நினதே
எங்கும் ஆட்சி தங்கும் மாட்சியால்
[illegible]
மீனமாய் ஆமையாய் ஏனமாய்ச் சிங்கமாய்க்
குறளனாய் மழுவனாய் அறவில் வீரனாய்
கலப்பை ஆளியாய் உலப்பில் குழலனாய்
உலகை ஓம்பும் அலகிலா ஆட்சி
ஆங்கிங் கெனாமல் எங்கும் அறிவாய்ச்
செறியும் இறைவ ! சிறிய தெருவில்
நின்னை எங்ஙன் உன்னுவன் அம்ம !
என்கண் பொருட்டோ தென்திருப் பேரையில்
பொருநைக் கரையில் கருணை பொழிய
மணியொளிர் முடியும் அணிகிளர் மார்பும்


ஆர். ஏ. அட்டுல் 3/22
செப்பனிடுபவர் பெயர்
பிப்ரவரி 1993
செப்பனிடுவதற்காக எடு
கொள்ளப்பட்ட நாள்
பிப்ரவரி 1993
செப்பனிட்டு முடித்த நா[illegible]
சரிபார்க்கும்
மு. பா. எ.
கையொப்பம்.

தண்மரைக் கண்ணும் கண்மலர் நோக்கும்
பவள வாயும் தவள நகையும்
நீல் மேனியும் கோல மார்வும்
ஆழி வளையும் வாழிசெங் கையும்
மின்னொளி உடையும் பொன்னருள் அடியும்
கொண்டது கொல்லோ அண்டர் நாயக !
அழகிய வடிவம்! அழகிய வடிவம் !
நெஞ்சே! நினையாய் நெஞ்சே! நினையாய்
பாழு நெஞ்சே! வாழ நினையாய்
வேடமும் கோலமும் நாடவும் வேண்டாம்
நீட்டலும் மழித்தலும் காட்டலும் வேண்டாம்
துறத்தலும் உலகை ஒறுத்தலும் உடலை
வேண்டாம் வேண்டாம் பூண்டா ரணிந்து
மண்ணை வெறுது பெண்ணுடன் வாழ்ந்து
பொருளை ஈட்டியும் அருளை நீட்டியும்
நெஞ்சே! நினையாய் நெஞ்சே! நினையாய்
முனைப்பற நினைவாய் வினைப்பற் றறுப்பாய்
அழக னிருக்கப் பழகு நெஞ்சே!
வேண்டுவன் இதுவே ஆண்டகைப் பொருளே !
வருக வருக அருள வருக
அண்ணா வருக வண்ணா வருக
அய்யா வருக மெய்யா வருக
இறையே வருக மறையே வருக
ஆலிலே துயிலும் மூலமே வருக
கரியினுக் கருளிய அரியே வருக
சேயினைக் காத்த தாயே வருக
குன்றை எடுத்த கன்றே வருக
சாதி இல்லா நீதி வருக
மதப்போர்க் கெட்டா இதமே வருக
நிறத்திமிர் காணா அறமே வருக
அறிதுயில் புரியும் அறிவே வருக
அன்பில் விளங்கும் இன்பே வருக
அத்த ! நின்னருள் மொய்த்த நெஞ்சம்
உருகும் உருகும் அருகும் போர்கள்



பலப்பல மொழியில் பலப்பல பெயர்கள்
பகர்ந்த சான்றோர் நுகர்ந்த இன்பம்
ஒன்றே அன்றோ நன்றே தெளியின்
ஒருவ நிற்கே மருவிய பெயர்கள்
பலவெனும் உண்மை நிலவுதல் உறுதி
எப்பெயர் நின்பெயர் எப்பதி நின்பதி
எவ்வுரு நின்னுரு எம்மொழி நின்மொழி
பேரெலாம் நீயே பேரிலான் நீயே
பதியெலாம் நீயே பதியிலான் நீயே
உருவெலாம் நீயே உருவிலான் நீயே
மொழியெலாம் நீயே மொழியிலான் நீயே
எல்லாம் நீயே எல்லாம் நின்னில்
பேரையில் பொலியும் பெருமை அழகு
தத்துவ நுட்பச் சத்தியம் விளக்கும்
போதம் அழிந்த நாத முடிவிலே
பணிசெயும் நெஞ்சம் அணிசெய அரசே !
வருக வருக அருள வருக
வருக வருக குருவாய் வருக
தென்தமிழ் கமழும் தென்திருப்
பேரை அரைசே! பேரை அரைசே !

—திரு. வி. க.

## சமரச சன்மார்க்க போதம்

[சமரச சன்மார்க்கத்தைப்பற்றி யான் அடிக்கடி பேசியும் எழுதியும்வருவது நேயர்கட்குத் தெரியும். எப்பொருள் பற்றியும் பேசவோ எழுதவோ நேரும் போதெல்லாம் அப்பொருளிடைச் சிறிதாதல் சமரச சன்மார்க்க மணங் கமழச் செய்வது எனது வழக்கம். என்னால் இயற்றப்பெற்ற நூற்களில் சில விடங்களில் பொதுவாகவும் சில விடங்களில் சிறப்பாகவும் சமரச சன்மார்க்கம் கமழ்ந்து கொண்டிருத்தலைத் தமிழ் அன்பர்கள் அறிவார்கள்.

எதற்குஞ் சமரச சன்மார்க்கம் வேண்டற்பாலது. சமரச சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொள்ளாத இயக்கம் எதுவாயினும் அஃது உயிரில்லா உடல் போன்றதாகும்.

வாழ்விற்குச் சமரச சன்மார்க்கம் இன்றியமையாதது. சமரச சன்மார்க்கம் ஒவ்வொருவர் உள்ளத்திலும், ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தேசத்திலும், உலக முழுவதும் நிலவின் நலம் பெருகும்.

பிளவுக்கும் பிரிவுக்கும் பிணக்குக்கும் இடந்தரும் இயக்கம் எதுவாயினும் அதனால் சகோதரநேயம் வளராதென்பது வெள்ளிடைமலை. எல்லா உயிர்களினும் விளங்குவது சத்தெனுஞ் செம்பொருள் ஒன்றே என்னுஞ் சமரச உணர்வு பரவப்பரவ உலகில் ஆன்மநேய

ஒருமைப்பாடு ஓங்குதல் ஒருதலை. ஒருவரை ஒருவர் அடக்கி யாளும் விலங்கியல்பை அழிக்க வல்லது ஆன்மநேய ஒருமைப்பாடே என்று துணிந்து கூறலாம். ஆன்மநேய ஒருமைப்பாட்டை எழுப்பும் ஆற்றல் சமரச சன்மார்க்கத்துக்கு உண்டு என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சமரச சன்மார்க்கம் ஒவ்வொன்றில் விரவி வரும் முறையில் இதுகாறும் பெரிதும் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். இனி அம்முறையுடன் சமரச சன்மார்க்கத்தைத் தனிமைப்படுத்தியும் பேசவும் எழுதவும் வேண்டுமென்னும் எண்ணம் தோன்றி யிருக்கிறது. அத்தொண்டை "நவசக்தி" வாயிலாச் "சமரச சன்மார்க்க போதம்" என்னுந் தலைப்பின்கீழ் ஆற்றிவரக் கருதி யிருக்கிறேன்.

அவ்வப்போது வெளி வரும் சமரச சன்மார்க்க போதப் பகுதிகளை ஊன்றி வாசிக்குமாறு நேயர்களை வேண்டுகிறேன். :—திரு. வி. க.]

## I தோற்றுவாய்

1. இயற்கையை உடலாக் கொண்டு எங்கும் என்றும் மாறுதலின்றி இருக்கும் ஒன்றாய், அறிவாய், அன்பாய், இன்பாய், அழகாயுள்ள இறை வாழ்க.

2. இறைக்கு உடலாய் நின்று திருவிளையாடல் புரியும் இயற்கை வாழ்க.

3. இயற்கை இறைவழி நின்று உலகை நடாத்திவருங் குருமார்கள் வாழ்க.

4. கால தேச வர்த்தமான நிலைமைக்கு ஏற்றவாறு, அவ்வப்போது குருமார்களால் அறிவுறுத்தப் பெற்ற அருள் மொழிகள் வாழ்க.

5. அருள் மொழிகளின் பொருளாயுள்ள சமரச சன்மார்க்கம் வாழ்க.

6. சமரச சன்மார்க்க சங்கம் வாழ்க.

7. சமரச சன்மார்க்கம் அநாதி. அது தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. அதற்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. பலபட்ட பெயர்களை நீக்கிப் பொருளைப் பார்த்தால் சமரச சன்மார்க்கம் ஒன்றே திகழும்.

8. சமரச சன்மார்க்க சங்க அமைப்பு :—தலைமை - இறை. அமைச்சு - இயற்கை. நிருவாகர்கள் - குருமார்கள். உறுப்பினர்கள் - உயிர்கள். சந்தா - இரக்கம்.

9. சமரச சன்மார்க்க போதத்தில் புதியது ஒன்றுங் கூறப்புகுகிறேனில்லை. கற்றல் கேட்டலானும், அறிஞர்களின் இணக்கத்தானும், சிறு சிறு தொண்டுகளில் ஈடுபட்டதானும் பெற்ற அடைவுகளான், இப்பொழுது விளங்கியுள்ள அறிவு கொண்டு, குருமார்கள் அருளிய உண்மைகளைத் தொகுத்துச் சுருக்கிக் கூறவே புகுகிறேன்.

10. முனைப்பு ஒதுங்கி ஒழிவதாக. குருமார்களின் ஒளி வழிகாட்டுவதாக. இயற்கை இறையின் திருவருள் படிவதாக.

11. சமரசம் உள்ள இடத்தில் சன்மார்க்கம் உண்டு. சன்மார்க்கம் உள்ள இடத்தில் சமரசம் உண்டு. ஆதலால் சமரச சன்மார்க்கத்தைச் சமரசம் என்றோ, சன்மார்க்கம் என்றோ சுருங்கச் சொல்லலாம்.

12. சத் + மார்க்கம் = சன்மார்க்கம். சத் - உண்மை; இறை. மார்க்கம் - நெறி; இயற்கை.

## II சத்

1. சத் என்பது உண்மை. உண்மை உள்ள இடத்தில் அறிவு உண்டு. அறிவு உள்ள இடத்தில் அன்பு உண்டு. அன்பு உள்ள இடத்தில் இன்பு உண்டு. இன்பு உள்ள இடத்தில் அழகு உண்டு. ஆகவே சத்தினை உண்மை என்றும், அறிவு என்றும், அன்பு என்றும், இன்பு என்றும், அழகு என்றும் அநுபூதிமான்கள் கூறிப் போந்தார்கள்.

2. சத் என்பதைப்பற்றி எழுந்துள்ள ஆராய்ச்சிகள் பல திறத்தன. சத், சடம் என்றும், அறிவு என்றும்—உள்ளது சடம் ஒன்றே என்றும், அதனின்றும் அறிவு பரிணமிக்கிறதென்றும்—உள்ளது அறிவு ஒன்றே என்றும், அதனின்றும் சடம்பரிணமிக்கிறது என்றும்—சத் ஆன்மா என்றும், அவ்வான்மாவே கடவுள் என்றும்—ஆன்மா வேறு கடவுள் வேறு என்றும்—ஆன்மாவுங் கடவுளும் ஒன்றுமல்ல வேறுமல்ல என்றும், அவை பொருளில் வேறாகவும் கலப்பில் ஒன்றாகவும் பிரிவின்றிக் கிடப்பன என்றும்—பலவாறு சொல்லப்படுகின்றன. இன்னோரன்ன தத்துவ நுட்பங்கள் யாவும் பேரறிஞர்களிடமிருந்து பிறந்தனவே யாகும். ஒவ்வொன்றிலும் அறிவு நுட்பம் இல்லாமல் இல்லை. கருத்துக்கள் பல திறத்தனவாய் வெளிவந்தமைக்குக் காரணம் என்னை? காரணம் பலபடக் கூறலாம். இங்கே விரிவு வேண்டுவதில்லை. பேரறிஞர்களிடத்திருந்து பல திறப்பட்ட தத்துவ நுட்பங்கள் வெளிவந்தமைக்குக் காரணம் என்ன என்று சரித்திரக் கண்கொண்டு நோக்கின், காலதேசவர்த்தமானங்களில் அவ்வப்போது நிகழும் மாறுதல் என்பது நன்கு புலனாகும். மக்களின் அறிவுநிலை ஒரு தன்மையதாக இல்லாது பலவகைப்பட்டதாய் இருத்தலான், அவ்வந் நிலைக்குப் பயன்படு முறையில் பேரறிஞர்களிடத்திருந்து, அவ்வப்போது தத்துவக் கருத்துக்கள் பல திறத்தனவாய் வெளிவந்திருக்கும் என்றுங் கூறலாம். ஒருவனே தன் வாழ்வில் பலவித கருத்துடையவனாதலும் ஈண்டுக் கருதற்பாலது. பலதிறத்தத்துவங்கள் அறிஞர்கள் வாயிலாக வெளிவந்ததில் தவறுதலில்லை. அவைகள் உலக நலத்தின் பொருட்டு வெளிவந்தன என்று கூறுதலும் மிகையாகாது. பலதிறத் தத்துவ நூல்களைப் பயிலலாம்; கேட்கலாம். அவைகளால் அறிவு விளக்கம் உண்டாகும். ஆனால் அவைகளைக் கருவிகளாகக் கொண்டு வாதத்தில் ஈடுபடுதலாகாது. காட்டில் பலதிற மரங்களிருக்கின்றன. அம்மரங்களெல்லாஞ் சேர்ந்தே காட்டின்பத்தை ஊட்டுகின்றன.

3. சத் என்பது உண்மை. எத்தகை உண்மை? மாறுதலில்லாத உண்மை.

4. மாறுத லில்லாத உண்மையே அறிவு என்பது. இவ்வறிவுக்குக் கருவி கரணங்களில்லை. கருவி கரணங்களுடன் கூடிய அறிவு கட்டுடையது. அறிவுக்கு நிலைக்களனாகவுள்ள கருவி மூளை. உயிர்களின் மூளைகளில் வன்மை மென்மை இருத்தல் கண்கூடு. அவ்வன்மை மென்மை மற்றக் கருவி கரணங்களுக்கேற்ற வண்ணம் அமைகின்றன. மனித உலகத்தையும் அதற்குப் படிப்படியாகக் கீழ்ப்பட்டு நிற்கும் மற்ற உலகங்களையும் நோக்கின், அவைகள் கருவி கரண அமைப்பில் மனித உலகத்துடன் மாறுபட்டிருத்தல் காண்கிறோம். அவ்வவ்வமைப்புக் கேற்றவண்ணம் மூளையின் தன்மை அமைகிறது. மீன் - பறவை - விலங்கு - மனித - உலகங்களின் மூளைகளைச் சோதித்துப் பார்த்தால், அம்மூளைகள் படிப்படியே மென்மை யுற்றுக்கொண்டு போதலை அறியலாம். மற்ற உயிர்களின் மூளையினும் மனித மூளை மென்மையதாயிருத்தலால், மனித உலகம் பலப்பல புதுமைகளைக் காணக்கூடியதாயிருக்கிறது. கூர்தல் (உள்ளது சிறத்தல் - Evolution) முறைப்படி கிடந்த உயிர்கள் ஊர்தலையும், ஊர்ந்த உயிர்கள் பின்னே சிறகையும், பின்னே நாற்கால்களையும், பின்னே முன்னிருகால்கள் கைகளாகி எழுதலும் மண்ணிற்படியப் பின்னிருகால்களையும் பெறலாயின. இவ்வியற்கை வளர்ச்சியில் அவ்வப்போது உள் உறுப்புக்களிலும் புற உறுப்புக்களிலும் உறும் மாறுதல்கள் பல. விளக்கம் உயிர் நூல்களிற் காண்க. இவ்வியற்கை வளர்ச்சியைச் சிந்திக்கச் சிந்திக்க இருகால் மனித நிலைக்கு மேலும் மேலும் நிலைகளிருத்தல்வேண்டும் என்பது விளங்கும். தாழ்ந்த உயிர்கள் இருகால் மனிதனாகும் வரை துணை நின்ற இயற்கை பின்னை வாளா இராது. அஃது உயிர்களை மேலும் மேலும் உயர்த்தத் தன் கடனை ஆற்றிக் கொண்டேயிருக்கும். கருவி கரணங்கள் அருக

அருக மூளை மென்மையுற்று அறிவு விளக்கம் பெறுதல் ஆராய்ச்சியால் தெளியப் பெற்ற உண்மை. மனித நிலைவரை அதனை நாம் காண்கிறோம். இவ்வாறு படிப்படியாகக் கருவி கரணங்கள் அருகி அருகி முற்றும் அற்றுப் போகும் ஒரு நிலையை ஒவ்வோருயிரும் என்றுதல் ஒருபோது அடைந்தே தீர்தல் வேண்டும் என்று ஊகித்து உணர்தல் கூடும். மேல்நாட்டு இயற்கைக் கலைகளும் கீழ் நாட்டுத் தத்துவக் கலைகளும் நெருங்கி நெருங்கி உறவாடி உறவாடி ஒன்றுபடப்பட இந்நுட்பங்கள் பல வெளியாகும். கருவி கரணங்களைப் பெற்றுப் பெற்றுப் படிப்படியாக விளங்கி விளங்கி, அவ்வவ்வளவில் கருவி கரணங்களினின்றும் விடுதலை அடைந்து அடைந்து, முற்றும் கருவி கரணங்களை இழந்து நிற்கும் அறிவு எத்தன்மையதாயிருக்கும்? அவ்வறிவு கட்டின்றித் தன் முழு இயல்புடன் இனிது விளங்கும். கட்டிலிருந்த அறிவுக்கு இயற்கையின் துணை நல்கிக் கருவி கரணங்களைத் தந்து அவ்வறிவை விளக்கி விளக்கித் தன்னைப் போலாக்குதற்கு என்றுங் கட்டில்லா ஓர் அறிவு தேவை என்று சொல்லவேண்டுவதில்லை. அவ்வறிவே சத் என்பது. சத்தெனும் அறிவும் கருவி கரணங்களுடையதாயின், அது கருவி கரணத் தொடக்குடைய அறிவை மேல் நிலைக்குக் கொண்டுவர இயலாததாய்க் கிடக்கும். ஆகவே கருவி கரணமில்லாத அறிவே சத் என்று உணர்க.

5. கருவி கரணமில்லாத அறிவு கட்டில்லாததாதலின், அஃது என்றும் மாறுதலின்றி ஒரு தன்மையதாய், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பதாகிறது.

6. அறிவைப்பற்றியுஞ் சில ஐயப்பாடுகள் உண்டு. அறிவு இரண்டு என்றும், அவை சிற்றறிவு பேரறிவு என்றும், அறியாமை இயல்பாயுள்ள அறிவு சிற்றறிவு என்றும், அறியாமையே இல்லா அறிவு பேரறிவு என்றும், அறியாமை உள்பொருள் என்றும் அநாதி என்றும், அவ்வறியாமையினின்றும் அறிவு விடுதலை யடைந்து பேரறிவில் இரண்டறக் கலப்பது வீடுபேறு என்றும், அறிவு ஒன்றே என்றும், அதற்கு அறியாமை இயல்பில் இல்லை என்றும், அறியாமை உள்பொருள் அன்று என்றும், அது கானற்சலம் போன்ற தோன்றுஎன்றும், விவகாரத்தில் அஃது இருப்பதுபோல் தோன்றுவதுஎன்றும், பாரமார்த்தத்தில் அதற்கு இருப்பு இல்லை என்றும், அறியாமையின் பொய்மை தெளிந்து அறிவாதல் வீடுபேறு என்றும் உலகம் பலவாறு கூறுகிறது.

7. அறியாமை உள் பொருளா இல்பொருளா ஆதியா அநாதியா என்னும் வாதத்தில் இறங்குவது அநாவசியம். வாதம் எப்பொழுதும்உண்மை உணர்த்துவது அரிது. அறியாமையை உள்பொருள் என்போரும், இல்பொருள் என்போரும், ஆதி என்போரும், அநாதி என்போரும் விடுதலைக்கு முயலுதல் வேண்டுமென்னுங் கொள்கை யுடையவர். பொய் அறியாமையினின்றோ அல்லது மெய்யறியாமையினின்றோ விடுதலை அடைவதற்குரிய முயற்சியில் தலைப்படுவதுஅறிவுடைமை. வாதத்தில் இறங்குவது அறிவுடைமை யாகாது.

8. கருவிகரணமின்றி எங்குமுள்ள சத்தெனும் அறிவு ஒன்றே. அதனை இறை என்றனர் ஆன்றோர். எங்கும் இறுத்தலை யுடையது இறை.

9. சத்தெனும் இறை யொன்றற்கே உலகில் பலமொழியில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பெயரையும் ஒவ்வொரு கடவுளாகக் கொள்வது அறியாமை. நீருக்கு உலகில் எவ்வளவோ பெயர்கள் வழங்கப் படுகின்றன. அப் பெயர்களின் பொருளாக உள்ளது நீர் ஒன்றே.

10. அறிவாய் அகண்டமா யுள்ள சத், மன உணர்வுக்கு எட்டாதது.

11. மன உணர்வுக்கு எட்டாத சத்தின் இருப்பை மன உணர்வினர் எப்படி உணர்வது?

12. மனஉணர்வினர் சத்தினை நேரே உணர்தல் இயலாதாயினும், அதன் இருப்பை அவர் உணர்தற்குக் கருவி இல்லாமலில்லை. கருவி எது? இயற்கை. இயற்கையைக் கொண்டு சத்தின் இருப்பை உணர்தல் கூடும்.

13. நமது உடலில் உயிர் இருக்கிறது. அதன் உண்மையை எவ்வாறு உணர்கிறோம்? உடல்வாயிலாக அன்றோ உணர்கிறோம்? அதேபோல இயற்கை வாயிலாகச் சத்தெனும் இறை உண்மையை உணர்தல் கூடும். இயற்கை உடல்; இறை உயிர்.

14. மன உணர்வு உடையோர், உடலாம் இயற்கையை விடுத்து உயிராம் இறையை உணர்தல் அருமை.

15. இயற்கை என்றும் இறை என்றும் சொல்லாலே பிரித்துக் கூறலாமேயன்றி இரண்டையும் பொருளாகப் பிரித்துக் காண்டல் இயலாது. இயற்கைக்கும் இறைக்கும் உள்ள தொடர்பு பிரிவற்றது.

16. இறையை விடுத்து இயற்கை நிற்பதில்லை. இயற்கையிலே முற்றும் எங்கும் நீக்கமற இறை நிற்கிறது.

17. இறை, இயற்கை அளவில் நிற்பதா, இயற்கைக்கு மேலுங் கடந்து நிற்பதா என்று சிலர் வினவலாம். மன உணர்வைக் கடந்த பின்னையே அந்நுட்பம் விளங்கும். மனவுணர்விலே அப்பேச்சு எற்றுக்கு? அது பேச்சற்றஅநுபூதிநிலை. அநுபூதியில் விளங்கத்தக்க ஒன்றைப் பேசிப்பேசி உலகம் இடர்ப்பட்டது போதும்! போதும்!!

18. அநுபூதி நிலையைப் பெறுவிப்பது இயற்கை இறை.

19. இயற்கையை அன்னை என்றும் இறையை அப்பன் என்றுங் கூறுவது கவிமரபு.

20. இயற்கை இறையைக் கவிகள் மனம்போனவாறு பாடிய பாக்களினின்றும் பல வடிவங்கள் பிறக்கலாயின. அவ்வடிவங்கள் இயற்கைப் படங்களாகும். அப்படங்களை இயற்கை இறையை நினைவூட்டுங் கருவிகளாகக் கொள்ளவேண்டுமேயன்றி இயற்கை இறையாகவே கொள்ளுதல் கூடாது. இவ்வாறே இயற்கைக் கூறுகள் வடிக்கப்பெறும் ஓவியங்களையுங் கொள்ளுதல் வேண்டும். நமது நெஞ்சம் இயற்கையினிடஞ் சென்றுபடிவதற்குக் காவிய ஓவியங்கள் பாலம் போலத் துணை செய்வன.

21. இறையை உயிராக் கொண்டு தான் உடலாகநின்று இயற்கை அன்னை தாங்கும்பலதிற அழகுக்கோலங்களும், புரியும்பலதிறத் திருவிளையாடல்களும், இயற்கை இறையின் இயல்கள் என்று சொல்லப்படும் அகண்டம் அறிவுஅன்பு இன்பு அழகு முதலியனவும் பாக்களாகவும், ஓவியங்களாகவும், கதைகளாகவும், நாடகங்களாகவும், பிறவாகவும் புலவர்களால் எழுதப்படுவதுண்டு. அவைகளை அவ்வவ்வாறே பொருளாக் கொள்வது தவறு. அவைகள் அறிவிக்கும் இயல்களை உன்னி உன்னி இன்புறுவது அறிவுடைமை. ஒரு நாட்டிற்கோ ஒருகொள்கைக்கோ பிற எதற்கோ அறிகுறியாகக் கொடி பறக்கவிடப் படுகிறது. அக்கொடி எதற்கு அறிகுறி என்பதை உணரவேண்டுமே யன்றிக் கொடிச்சீலையையும் நிறத்தையும் பொருளாக்கொள்வது அறிவுடைமை யாகாது.

22. இயற்கையை உடலாக் கொண்ட இறை பிறப்பது மில்லை; இறப்பது மில்லை. அஃது என்றும் மாறுத லின்றி ஒரு தன்மையதா யிருப்பது.

23. உலகு உய்யக் கடவுள் மனிதராக அவதாரஞ் செய்கிறார் என்று சில விடங்களிற் சொல்லப்படுவது உண்டு. அஃது உபசாரமே யன்றி உண்மை யன்று.

24. உலகின் பொருட்டு அவ்வப்போது அவதாரஞ் செய்வோர் குருமார்களே யாவர்.

25. குருமார்கள் கடவுளாகவும், கடவுள் அவதாரமாகவும் சிற்சில விடங்களில் போற்றப்படுகிறார்கள்; வீரர்களும் அவ்வாறே சிற்சில இடங்களில் போற்றப்படுகிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் அன்பும் நன்றியறிதலுமாகும். அன்பும் நன்றியறிதலும் எல்லாஞ் சொல்லச் செய்வது இயல்பு.

26. குருமார்கள் என்போர் தமக்கென் ஒன்றில்லாதவராய், முனைப்புச் சிறிதுமின்றி இயற்கை இறைவழி நிற்பவராய், கருவி கரணச் சேட்டை இல்லாதவராய், கருவிகரண மெல்லாம் அமுதூறப் பெற்றவராய், இறையொளி நீங்காது விளங்கும் நெஞ்சத் தாமரையுடையவராய், என்றும் அருளேயுடையவராய், சிவந்த பொன் வண்ணராய், இயற்கை வழிபாட்டாலும், பயன் கருதாப் பணியாலும் தம்மைப் பண்படுத்திக் கொண்ட உயிர்கட்கு மெய்ம் மொழிகூறி உண்மை விளக்குவோராய் இருப்பவர்.

27. எங்கு மியங்கும் மின்சாரம், பொறி அமைத்துத் தொழிற் படுத்துமிடத்தே விளங்கித் தோன்றுவதுபோலக் கருவி கரணமின்றி எங்கு முள்ள சத், குருமார்களின் நெஞ்சத் தாமரையில் ஒளியாய் நீக்கமின்றி விளங்கிக் கொண்டிருக்கும்.

28. சத்தெனும் இறை, கருவி கரணங்கள் இல்லாத தாதலாலும், அதனைக் காண்டல் அரிதாதலாலும், அவ்விறையொளி விளங்கும் நிலைக்களனுகக் குருமார்கள் இருத்தலானும், அவர்கள் வாயிலாக உண்மை உணர்வதாலும் அவர்களைக் காணுங் கடவுளாகக் கொள்ளவேண்டு மென்பது ஒருவித மரபு. கடவுளுங் குருவும் வேறாயினும் இருவரையும் பிரித்துக் கூறாது ஒன்றுபடுத்திக் கூறுதல் வேண்டு மென்பது மற்றொருவித மரபு. இருவரையும் ஒன்றுபடுத்துவதால் நாளடைவில் கடவுள் கருவிகரணமுடைய னென்னுங் கொள்கை பிறத்தற்கு இடம் நேர்தலால், இருவரையும் பிரித்துக் கூறுதல் வேண்டு மென்பது இன்னொருவித மரபு. இம்மரபுகளினின்றும் பிரிந்து படர்ந்த கொடிகள் பலப்பல.

29. மரபுகள் பலவாக உலகில் தோன்றிவிட்டன. அவைகளின் நுட்பங்களைச் சமரச நோக்குடன் பார்க்கப் பழகுதல் வேண்டும். உலகம் பலவிதம். எல்லார் முகமும் ஒன்றாக அமைவதில்லை. எல்லார் கருத்தும் ஒன்றுபட்டிருப்பதில்லை. ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு சுவையில் விருப்புத் தோன்றுதல் இயல்பு. ஒரு மரமே பலப்பல கவடு கோடுகள் விட்டுப் பிரிந்து, பலப்பல இலை அரும்பு மலர் காய் கனிகளையுந் தாங்கி நிற்கிறது. ஒரு பேர் யாற்றினின்றும் எத்துணையோ கால்வாய்கள் பிரிந்து பிரிந்து ஓடுகின்றன. இவ்வாறே மரபுகளும் ஒன்றிலிருந்தே நாளடைவில் பலவாகப் பெருகி விட்டன. மரபுகள் யாவும் இறை இயற்கை குரு - இவைகளையொட்டியே சுழன்று சுழன்று நிலவிக் கொண்டிருக்கின்றன. அவ்வம் மரபை அவ்வம் மரபினர் மனங்கொண்டு பார்த்தால் பிணக்குக்கு இடமிராது.

30. சில விடங்களில் குருமார்களுக்கு வழங்கப்படும் பெயர்கள் கடவுளுக்கும் வழங்கப்படுகின்றன. அப்பெயர்களைப் பற்றிய வாழ்த்தும் வணக்கமும் எங்கே சாரும்? அவை குருமார்கள் வாயிலாக எல்லாம் வல்ல இறையையே சாரும்.

31. அவரவர் அறிவாற்றலுக்கு ஏற்ற வண்ணம் இறை யுண்மை விளங்கும். அவ்வவ்வாற்ற லளவில் எழும் வாழ்த்தும், நிகழும் வணக்கமும் சத் ஒன்றையே சாரும். வாழ்த்தும் வணக்கமும் மெய்யன்பு வழி நிகழ்தல் வேண்டும்.

32. கருவி கரணமில்லாச் சத்தெனும் இறையொன்றே குருமார்கள் உள்ளத்தைக் கோயிலாக்கொண்டு கால தேச வர்த்தமான நிலைகளை யொட்டி அவ்வந்நாட்டு மொழியில் மறையை அருளிச் செய்கிறது. ஆகவே குருமார்கள் மொழிகள் எல்லாம் இறையின் மறைமொழியே யாகும்.

திரு. வி. கலியாணசுந்தரன்.

(தொடரும்)

# சிவ நெறி விளக்கம்

[ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்]

I

)யல்பினிற் பிரியா தெங்கணு மொளிரு
மின்பமெய் யறிவுடை விளக்கே!
செயல்பெறு சக்திக் கிறைவனே! யுள்ளச்
சிதம்பரக் கூத்துடை முதல்வா!
மயலறுத் தென்னை மாணடிக் காண்ட
மன்னவா சொன்மனங் கடந்தோய்!
அயலறு மன்பர் தமைக்கலந் தருளும்
அமுதினு மமுதமாம் சிவமே!

## சிவம்

ஆன்மாக்களின் நீண்ட முறையீடென்ன? சமயங்களெல்லாம் நாடுவதென்ன?—இன்பம், இன்பம், இன்பம்! இன்பமே தானும்பொருளெது? உயிர்க்குயிராய், உயிர்களைத் திருமேனிபூண்டு உலவுவதெது? எள்ளுக்குள் எண்ணெய்போல், பூவும்மணமும்போல், கதிரவனுங் கதிரும்போல் எங்குமநிறைந்ததெது? யாதினும் இணைபிரியா அத்துவிதப் பொருளெது? தான் அருவாய், நிலையாய் நின்று, தனது சந்நிதி மாத்திரத்தில், தனது அருள்வல்லபத்தால் உலகெலாம் இயங்க நிற்பதெது? தனக்கே ஊறுகும் உள்ளன்ப ருள்ளத்தில் அமுதூறிக் கலந்து காட்டும் பரஞ்சுடர் எது? தோன்றியும், தோன்றாதும், அடியார்க்கு எளியனுகத் துணை புரிவதெது? திரிபு, மாற்றம் அற்று இருந்த பொருள், இருந்தபடி யிருந்தும் அலகிலாவிளையாட்டயர்வதெது?—அதுவே சிவம், சிவம், சிவம்! அஃது ஒன்றே! அதைப் பலவாறு பலர் கூறுவர்.

பலர்பற் பலவாகப் பாரிற் பகர்வர்
உளதொருவ னென்றே யுணர்.

## பிரமம்

அதையே வேதம், "அம்ருதம், ஆனந்தம்" எனும்.

"தத்ப்ரஹ்ம, ததேவாம்ருத முச்யதே"

அதுபிரமம்; அதுவே அமுதம் சிவம் எனப்படுகிறது.

"ஐம் வித்யாச் சுக்ர மம்ருதம்"

அதைத் தாயதென்றும் அமுதென்றும் அறிக.

அதையே தெய்வத் தமிழ்மறை—அழிவிலா ஆனந்தவாரி, அறிவாந் தேற்றேன், சிந்தனையுள் உண்ணாரமுதே, உள்ளமே, இன்பமே, அன்பே, சோதியாய்த் தோன்றும் உருவமே யருவாம் ஒருவனே சொல்லுதற் கரிய ஆதியே நடுவே அந்தமேபந்த மறுக்கும் ஆனந்த மா கடலே தீதிலா நன்மைத் திருவருட் குன்றே, அரசே, பொன்னம்பலத்தாடும் அமுதே, முழுமுதலே, வழி முதலே, முடியாமுதலே, உடையாய், அடியார்க் கெளியாய், சிதம்பரமே, பரம்பரமே, அம்பரமே, அருள் வெள்ளமே—என்று ஆவியுருகி இன்பம் பெருகக் கூவும்! அதையே இறைவன், பரமபிதா, அல்லா, யஹோவா, தவோ, அகால் என்றும் பற்பல மதங்கள் கூறும். அம்முதற் பொருள் உண்மை, அறிவு, இன்பம்—சச்சிதானந்தம்; அதுவே அதற்குப் பொருத்தமான பெயர்.

## சக்தி

'ஆம் ஐயா, சிவன் சிவன், கடவுள் கடவுள் என்கிறீரே, அவனைச் சற்று முன்னே கொண்டு சாட்சிப் பெட்டியில் நிறுத்துங்கள்; பின்னே நாங்கள் பார்த்து நம்புகிறோம். இதுமனித மூளையின் பொறிகளையும், காட்சிகளையும் விளக்குங்காலம். மனிதன் தன் திறத்தால் வானிற் பறக்கிறான்; இடங்காலத்தை வெல்கிறான். இன்னும் சில காலத்தில் பௌதிக சாத்திர முன்னேற்றத்தால் பிரம்ம தேவனுக்கே வேலையில்லாத் திண்டாட்டம் வந்துவிடும்போலிருக்கிறது. இக்காலத்தில் கடவுள், சிவன், நாராயணன் என்பவெல்லாம் பொய், பிதற்றல்' என்கின்றனர் சிலர். ஆனால்அவர்களும் ஏதோவொன்றையே நம்பியிருக்கின்றனர். ஹெக்கல்(Heckel)

முதலியோர் சாருவாகர். இவர்களின் அடியார்களான அவர்களுடைய சட சாத்திரத்தை வினவினல்: "நான் ஒரு சக்தியால் இயங்குகிறேன்" என்னும். அந்தச் சக்தியை (Energy) வலிமை என்று சட நூல் கூறும். அதனாலே சூடு (Heat), ஒளி (Light), கவர்ச்சி (Magnitism) மின்னல், (Electricity) எல்லாம் நிகழுமென்பது அவர்களுக்குத் தெரியும். மாபெரும் சடநூற் புலவர்களான போஸ், ராமன், எடிஸன், ஈன்ஸ்டின் முதலியோர் அச்சக்தி எங்குமுள்ளதை, எல்லாமாவதை விளக்குவர். இந்தச் சக்தி தூலசக்தி. இதையும் இயக்கும் ஒரு நுண்மையான திறன் (Ethereal force) உள்ளது. அது சடநூலாளரின் ஆய்குழாய் (Test tube)க்கும் மூளைக்கும் அப்பாலுக் கப்பாலுக் கப்பாலுக் கப்பாலானது. அதுமற்றொரு பரம்பொருளுடன் இணை பிரியாதுள்ளது. எப்படி? ஒரு வீட்டினுள் வெளிச்சம் நிறைந்துள்ளது. இதுவே சடநூலார்பாராட்டும் Energy—வன்மை. (Energy is all, Energy is every where, Energy is heat, light, electricity and maginitism) வீட்டிற்குள் நிலவும் இவ்வெளிச்சத்திற்குக் காரணமென்ன? அதற்கு மேம்பட்ட தொன்றுண்டா எனின் வெளியே சென்று நோக்கினல் வெயில் புலப்படும்—அந்த வெயில்! எதனின்று போந்து பரவுகிறது? கதிர்களினின்றும் போந்து பரவுகிறது. கதிர்கள் எதை முதலாகக் கொண்டன? —சூரியனை. ஆதலின் சோதிக்கு ஆதியாயுள்ளதெது? சூரியன். அதற்கு ஆதியாயுள்ள பரஞ்சுடரைப் பின்னே அறிவாம். சூரியனிடமிருந்து இணைபிரியாததெது? கதிர்.

எவையுமுலவ் தூய்யவொளி யீயும் பகலோன்
இவருங் குணம்போ விறை.

இதுதான் உண்மை. காயத்ரி "தத்ஸவிது:" என்பது சிவசூரியனே. இப்போது சிந்திப்போம். சூரியன் நின்றபடி யுள்ளது. அதற்கு மாற்றம் திரிபில்லை; அது தற்பரம்; தன்மயம்; சுயஞ்சோதி. சூரியன்போன்றது சிவம்-பிரமம் - இறை - சத். அதில் இணைபிரியாத கதிரே அதன் சக்தி (Concious force) அஃது ஒளியாகிய ஞான சக்தியையும், சூடாகிய இச்சா கிரியா சக்திகளையு முடையது. இந்தக் கதிர்க் கணங்களே (சக்திப் பெருக்கு) உலகில் ஒளியின்பமாக எங்கும் பரவுகின்றன. இறைவன் சத்து, கதிர் சித்து, அது ஆனந்தமயமாகப் பரவியுள்ளது. கடவுள் தற்பரம்; சக்தி, சிற்பரம். உலகெலாம் சக்தி விலாசம். சக்தியும் சிவனும் ஒளியும் சூடும் தன்மையும் போன்ற ஒன்றே. சக்தியின்றிச் சிவனுக்கு ஆடலில்லை. சக்தியே சிவனின் சைதன்யம் - அறிவுத்திறன் - (Conscious force) சித்தபஸ்-(Creative askesis) விளக்கம் (Manifestation). சக்தியே அருள். இந்தச் சக்தியை வேதம் "ஆகாசம், தகராகாசம், சிற்பரம், சிதம்பரம்" எனும்.

"ஆகாச சரீரம் ப்ரஹ்ம"

"யஸ்ய ஸா பரமாதேவீ
சக்தி ராகாச ஸம்ஜ்கிதா"

இறைவனின் பரமதேவியான பராசக்தியை (Supreme Energy) ஆகாயமென்பர். வித்தையென்றும், பரை, அம்பரம், ஆகாயம், வியோமம், ககனம், கம், ஆனந்தம், மாயை என்றும் சக்தியைக் கூறுவர். இந்தச் சிவசக்தியே இணைபிரியாப் பரம்பொருள்; இந்தச் சிவசக்தி தத்துவம், படைப்பணிகளிலெல்லாம் காண்க. இறைவன் அருவுரு, சிவசக்தி, சகலத், சகுண நிர்க்குணம். இந்த அருட், சக்தியின் வாயிலாகவே அவன் எங்கு முள்ளான்; எதையுஞ் செய்கிறான். இவ்வருளாலேயே அவன் புலப்படுவான்.

"அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ
[ணதே"

எனும் தமிழ்வேத மொழியை யறிக. அவனருளே, சிற்சக்தி; "ஞானபலக்கிரியை". சிவனை முக்கண்ணன் என்பர்.



அவை ஞான, இச்சா, கிரியா சக்திகளே. கதிரின்றிக் கதிரவன் ஒளிரான். கதிரவன் என்பதிலேயே கதிர் அவன் எனும் இருசொற்களுள்ளன. 'அவன்'. சிவம்; 'கதிர்' சக்தி. சைவ சமயத்தின் பெருந்தகையான உண்மை இது. சக்தி மறுக்கொணாதது. ஏகான்மவாதச் சங்கரரும் மாயை அனாதி அநிர்வசநீயம் என்கிறார்.

## ஆன்மா

"சரிதானையா! நான் வெயிலைப்பார்க்கிறேனே. அதுமாதிரி அந்தச் சக்தியையேனும் காட்டித் தொலையுமே" என்கிறான் கலியுக முரட்டன்.

காட்டுவதற்கு யான் யாரப்பா!

"தேனாய்இன் னமுத முமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனனுள்
புகுந்தடியேற் கருள்செய்தான்"

என்பதே சொல்லத்தக்கது.

"எங்குமுள்ள அந்த அருள் எனக்கேனையா விளங்கி, இதோ பார் நான் இருக்கிறேன். இனி நாத்திகம் பேசாதே; அடியார்களைத் திட்டாதே என்னலாகாது?" என்கிறான் வாதி. "அப்பா கடவுள் என்ன கோர்ட்டு சாட்சியா? நீ அவனுக்கு நீதிபதியா? நீ கூப்பிட்டவுடன் அவன் வரவேண்டுமோ? இல்லாவிடில் நம்பாயோ? நீ நம்பாவிடில் அவன் பெருமை குன்றிவிடுமோ? ஓர் அரசன் இருந்தான்; அவன் எப்போதும் தனது மாளிகைக்குள்ளேயே இருப்பான்; வெளியே வருவதில்லை. அவன் தனது மந்திரிகள் மூலம் தனது ஆணையைச் செலுத்தி ஆண்டுவந்தான். மந்திரிகளின் ஆணையைச்சேவகர் நிறைவேற்றி வந்தனர். சில மக்களுக்கு உடனே மனமயக்க முண்டாயிற்று. 'அரசன் இருப்பது பொய். யாரோ சில சுய நலக்காரர்கள் ஆட்சிசெய்து ஆதிக்கஞ் செலுத்துகின்றனர்' என்று பெருத்த கிளர்ச்சி தொடங்கிச் சேவகரைத் திட்டி 'ஐயா அரசன் ஆணையென்கிறாயே அந்த அரசனைக் காட்டு' என்று நெருக்கினர்; சேவகர் 'ஐயன்மீர் அரசன் தனது மந்திரிமார் மூலம் ஆணையிடுகிறான்; அவர்களுடைய ஆணையை நாங்கள் தாங்கி உங்களுக்குச் சொல்லுகிறோம்' என்றனர். அது பொய் என்று சேவகரைப் புடைக்கத் தொடங்கினர். வேறு பலர் மந்திரிகள் கட்டளைக்கு அடங்கி அன்புடன் நடந்தனர். அவர்களன்பை மெச்சி அரசன் காட்சியீந்தான். அவ்வன்பர் வலியபடை சேர்ந்தனர். எங்களன்பு, அருளால் அரசனைக் காட்டிற்று. நீவிரும் அன்புடன் அடங்கி நடக்கின் பயனும். அகந்தையுடன், 'அரசன் எம்மிடம் வந்து முன்னிற்கட்டும்' என்றால் 'அது பலியாது' என்றனர். நம்பிக்கையற்றவர் அன்பருக்கு இழைத்த தீமைகளை யெல்லாம் அரசன் துணை நின்று தடுத்துவந்தான். தங்கள் சூழ்ச்சிகளெல்லாம் பலியாது போகவே முடிவில் ஏதோ வொரு பலம் இந்த அடியார்களின் பின்னுள்ளது என்று அறிந்தனர். அதுவே அன்புறுதியா லெய்தும் அருள் என்று கண்டு முடிவில் இருந்தனர். இதுபோலவே இல்லைவாதி தில்லைவாதி யாவதுண்மை. மனிதான்மாவுடன் கடவுள் அத்வைத வுறவு கூடியேயுள்ளான். எனில் அவனை யறியாததேன்? சுரங்கத்தினின் றெடுத்த மண் கட்டியில் தங்கம் முதலிற் புலனுகிறதா? இல்லை. ஏன்? அதைப் பல வகையான அழுக்குகள் மூடிக்கொண்டுள்ளன. அதை எத்தனை யந்திரங்களின் வாயிலாகச் சுத்திசெய்து பிறகு மாற்றேற்றுகின்றனர்! அதுபோல நம்மிடமுள்ள சைதன்யத்தை மறைப்பது அழுக்கு! இதைச் சித்தாந்தம் பாசம் அல்லது மலம் என்னும்.

"அவன் அவள் அதுவெனும்
அவைமூ வினைமையின்;
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்று தூய தமிழில் மெய்கண்டார் அருளிய சித்தாந்த உபநிடதமான சிவஞானபோதங் கூறும்.

வேதம் இறைவனை அது எனும் (தத்); சாக்தம் அவள் எனும் (ஸா);

இஞ்சில் முதலிய ஆத்திக மதங்கள் அவன் (ஸ :) எனும். சைவசித்தாந்தமோ, அவன் அவள் அது எனும் முத்தொகுப்பான தோற்றங்களனைத்திலும் இறைவனிருக்கையைக் காணும். சைவம், விபூதி சந்தனம் குங்குமம் மூன்றையும் ஏற்கும்.

சிவஞானபோதத்தின் முதற் செய்யுள் கடவுளிருக்கையை வலியுறுத்துகிறது.

உலகுயிர்கள்; அவன் அவள் அது (ஆண், பெண், அஃறிணை) என மூன்று வகைப்படும். அவை, பிறப்பு, வாழ்வு, அழிவு எனும் மூன்று செயலுடையன. அவை தோன்றுவதுபோலவே ஒடுங்குவதாகும்.

ஆன்மாக்களுக்குப் பிறப்பெய்துவது மலம் அல்லது பாசத்தால். அதற்கு எது முதலோ அதுவே முடிவாம். உலகிற்கு இறைவனுண்டு; குடத்திற்குக் குயவனுண்டு. அவனாலேயே அது மூன்று தோற்றமுடைத்து. அவனுடைய ஆணைச் சக்கரமே அனைத்தையும் நடத்துகிறது.

அவையே தானே யாயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

அவையே + ஆய் = கடவுள் அவ்வுயிர்களாகியும்—தானே ஆய = கடவுள் ஆன்மாக்களாகாமல்வேறாயிருந்தும்—ஆணையின் = தனது, ஆக்கினையால் (ஆஞ்ஞா சக்தி)—இருவினையில் = உயிர்கள் முற்பிறப்புகளிற் செய்த தொந்த வினைகளின் காரணமாக, போக்கு வரவு புரிய = பிறப்பிறப்புக்களைக்கொடுத்து—நீக்கமின்றி நிற்குமன்றே = ஆன்மாக்களை நீங்காது இறைவன் நிற்பான். இக்கருத்தையே தமிழ் மறையான திருவாசகம் "அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற்கட்டிப்புறந்தோல் போர்த்து" 'நாற்றத்தின் நேரியாய்' என்று கூறும். இந்தப் போக்கு வரவு எதற்காக வெனில், ஆன்மாவென்னும் போக்கு வரவால் புடம் போட்டு ஆன்மாவின் ஆணவம், கன்மம், மாயையெனும் முத்தனை நீக்கி, பொய்யாயின வெல்லாம் போயகல, சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி மெஞ்ஞானமாகி மிளிருவான் இறைவன்.

ஆடித் துகள்நீக்கின் அம்முகமே
காணுவபோல்
நீடுநசை நீக்க நிசம்.

பொருள்

இப்போது மூன்று பொருள்கள் காணப்படுகின்றன. (க) சக்தியுடன் கூடிய இறைவன்—சக்தி சிவன்—(உ) உலகான்மா (ங) அவற்றினிடையே நிற்கும் தடை(மும்மலம்). இவற்றையே வேதாந்தம் பரம், ஜீவம், ஜகத் எனும். இதையே சித்தாந்தம் தெளிவாகப் பதி, பசு, பாசம், அல்லது இறை, உயிர், தளை என்னும். இம்முப் பொருளின்றி எதுவுமியலாது. இவை மூன்றும் உள்ள உண்மைகளே. முப்பொருளுண்மை சித்தாந்தத்தின் சிறந்த தத்துவம். அனைத்தையும் அருளால் ஆட்டுவிப்போன் பதி ; இறை.

எண்குணத்தான் ஏகனே
எல்லாம் அடங்கவுளான்
புண்ணியனும் போதப்பொருள்.

இறைவன் தற்பரன், தன்மயன், சுதந்திரன், தன்வயத்தன், தன் ஆணையால் அனைத்தையும் நடத்துவோன், அருட்டிரு மேனியான், திகம்பரன், சிதம்பரன், அருவன், உருவன், அருவுருவன், துரியன்; தனது விருப்பத்தின் வாறே, அடியாருய்ய எவ்வுருவும் எடுக்கவல்லான்; அவன் உருவெடுத்தல் பிறப்பிறப்பா லன்று; அஃது அருள் வல்லபத்தால். சைவ சமயம் அவதார வாதத்தை ஏலாது. ஆண்டவன் தானே அறிவாய், இயற்கை யறிவினனாக நிற்பவன். அவனருளால் அவனறிவு வாய்த்தால் அவன் உணர்வும், தன்மையும், இன்பமும், உண்மையும் புலனாகும். அவன் அனைத்தையும் முற்று முணர்ந்து, அவரவர் வினைப்பயனை யீர்ந்து தான் இயல்பாகவே பாசத்தினீங்கி, சுத்த சுதந்திரானந்தனாகி, சுயம்பிரகாசனாக விளங்குகிறான். பாசத்தாற் கட்டுண்டுழலும் ஆன்மாக்கள்மீது பேரருளுடையவனாகவே தனது சக்தியால் ஐந்தொழிலும் புரிகிறான். தனுகரணபுவன போகங்களைத் தந்து, நுகர்வித்துப் பாசத்தை அணுவணுவாகத் தேய்வித்துத் தூய்மையாக்கி அருள் வார்த்து அறிவொளிர்விக்கின்றான். அவன் வரம்பிலின்பமுடையோனாதலின் ஆன்மாக்களனைவரையும் இன்பத்திலுய்க்கவல்லான். ஆன்மா அனாதி பெத்தனாகப் பாசத்திற் கட்டுண்டு அறியாமையிற் கிடந்து கல்லாய், புல்லாய், விலங்காய், மனிதனாய், தேவனாகி, தளை நீங்கி, இறைஞானம் பெற்றுத் தலைவனை யறியும். "அருளுடைய பரம் என்றோ அன்றேயானுளன்; எனக்கே ஆணவாதி பெருகுவினைக்கட்டு" என்று தாயுமானவர் உரைப்பதன் நுட்பமறிக.

"கருமருவு குகையனைய காயத்தி னடுவுளே
களிம்புதோய் செம்பனைய யான்
காண்டக இருக்கநீ ஞானஅனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின் னருளான குளிகை
பரிசித்து வேதி செய்து [கொடு
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை யென்சொல்லு கேன்"

என்று மொழியும் தமிழ் உபநிடதமான அருள் வாக்கால் பாசான்மாக்கள், திருவருளால் முத்தான்மாவாகும் வகையைப் பளிங்கு போல விளக்குகிறது.



# சுந்தர சுலோசனா

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(உரிமை ஆக்கியோருடையது)

பரமன் துதி

"மெய்தானரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான்தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே"

—திருச்சதகம் க.

## இதழ் 1

### மோகன சுந்தரமே கள்வனென நீர் எண்ணுகிறீரோ ?

இயற்கையின் எழிலையோர்ந்து அதன் வாயிலாக இறைவனின் தூய அழகை உய்த்துணரும் ஆற்றல், இற்றைஞான்று தமிழ் மக்கள் அகத்தில் அருகிக் கிடக்கின்றது. தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழிமாட்டு அரும்பியுள்ள வெறுப்பே, அதற்கு முக்கிய காரணமெனக் கூறலும் பொருந்தும். தற்காலக் கல்விமுறையான் உள்ளும் புறனும் ஆங்கில மயமாய் இலங்கும் நம் தமிழ் மக்கள், ஆன்ம வுணர்ச்சி யற்ற மேனாட்டு நாகரிக வெளி மயக்கில் மயக்குண்டு மதிமயங்கி நிற்கின்றார்கள். அந்நிலையில் அன்பு நெறி பற்றி இன்ப வாழ்வெய்திய பண்டைத்தமிழ் அறிஞர் கையாண்ட ஆன்ம வுணர்ச்சியோடியைந்த உண்மை நாகரிக உணர்ச்சியை அன்னார் பெறவும் ஒல்லுமோ ? இயற்கையில் இயற்கை மாட்டுப் புலனாகும் எழிலை உணரும் ஆற்றல் அருகிய தற்காலத்தில் செயற்கையின் வள

மையே வளமுறு மென்பதற்கோர் ஐயமுமுண்டோ?

அத்தகைய நாகரிக முதிர்ந்ததென, ஆங்கிலத்தமிழரால் கருதப்படும் நல்ல தலங்களுள் சென்னையம்பதியும் ஒன்றாகும். நீதிமன்றம், அரசியல் மன்றம், நகர பரிபாலனமன்றம், புகைவண்டி மன்றம் முதலிய பலவகை மன்றங்களும், உயிர்க் களஞ்சியம், உருவக் களஞ்சியம், என்புக் களஞ்சியம், உலோகக் களஞ்சியம், மீன் களஞ்சியம் முதலிய களஞ்சியங்களும், பண்டை நூற்கல்லூலம், நூற்கல்லூலம், கல்லூரிக் கல்லூலமெனும் பலவகைக் கல்லூலங்களும், கிறித்துவக் கல்லூரி, இராஜதானிக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, வெஸ்லியன் கல்லூரியெனும் பல கல்லூரிகளும், எண்ணிறந்த பள்ளிகளும், பழைய சாமான்களைப் புதிய விலைக்கும் புதிய சாமான்களைப் பழைய விலைக்கும் விற்றிடும் தூயவியாபாரத்தலங்களும், நாகரிகத்திற் கேற்ற அணியாடை அரங்கங்களும், மதிப்பு மிகுந்த மயிர்வினைஞர் விடுதிகளும் சிறப்பு வாய்ந்த சலவைச் சாலைகளும், பண்டைக்காலத்தில் வழிப் போக்கருக்கு வேனிற்காலத்தில் நிழலீந்து பெருந் தொண்டாற்றிய இயற்கைச் சாலைகளுக்குப் பதில், ஆயிரக்கணக்காகப் பணம் செலவிட்டு தார்விட்டு வேயப்பட்டுள்ள நரக வேதனை நகர சாலைகளும், மின்சார வண்டி, மோட்டார் வண்டி, பறக்கும் வண்டி, மிதக்கும் வண்டி, நடக்கும் வண்டி, ஓடும் வண்டி, ஓட்டும் வண்டி முதலிய பலவகை வண்டிகளும், சாலைகளி னிருபுறமும் ஓரடுக்குமுதல் ஐந்தடுக்கு வரை நூதனமாக இலங்கும் பலவிதமான மாளிகைகளும், மன்னர் மன்னரின் பிரதிநிதியின் பிரதிநிதியாகிய கவர்னரின் அரண்மனையும், ஆடுங்காட்சிச் சாலை, பாடுங் காட்சிச் சாலை, ஓடுங் காட்சிச் சாலை பேசுங் காட்சிச் சாலையெனப் பல்வகைக் காட்சிச் சாலைகளும், நகர பரிபாலன சபை வீரர்களின் பெயர்களுடன் பொலியும் அழகிய சிங்கார வனங்களும், குதிரைப் பந்தயம், மனிதப் பந்தயம், குதிக்கும் பந்தயம், குத்தும் பந்தயம், முறிக்கும் பந்தயம்; மாட்டுப் பந்தயம் முதலிய பலவகைப் பந்தயங்களும், கால்பந்து, கைப்பந்து, கட்டைப் பந்து முதலிய விநோத விளையாடல்களும், கிறித்துவ ஆலயம், மகமதிய ஆலயம், சமய குரவர் பாடிய மாண்புடன் விளங்கும் சைவ வைணவ ஆலயங்கள் முதலிய ஆலயங்களும் மலிந்து சிறக்க விளங்கும் நஞ் சென்னையம்பதியின் தற்கால மேனாட்டு நாகரிகத் தடபுடல் சென்னைக் கடற்கரையி லன்றோ நனி விளங்கும்!

இவ்வாறு செயற்கை எழில் ஓங்கி இயற்கையழகு ஒடுங்கிய சென்னையம் பதியில், புரசை பெரிய சாலையில் "அரங்க நிலையம்" என்னும் அழகிய மாளிகை யொன்றுண்டு. ஒரு பால் செயற்கையின் எழிலையும், மறுபால் இயற்கையின் மாண்பையும் அம்மாளிகை ஒருங்கே எடுத்தோதி நின்றது. அணியணியாய் வகுக்கப்பட்ட, நன்மலர்ச் செடிகளையுங் கொடிகளையும், இன் கனி யளிக்கும் மரவகைகளையும் கொண்ட அம்மாளிகை இயற்கையின் இயல்பை யொருபாலோத, அவ்வியற்கைக் கிடையில் மிளிர்ந்தெழுந்து விளங்கிய ஈரடுக்கு மாளிகை செயற்கை யழகை மறுபுறம் விளக்கியது.

அம்மாளிகையின் வாயிலின் வலது புறம் "ஜயகுமாரன்" என்னும் பெயர் அழகிய பித்தளைத் தகடுள் பொலிந்து நின்றது. நாம் சில ஆண்டுகளாக வரைந்து வரும் துப்பறியுந் தமிழ் நாவல்களைப் படித்துள்ளோர் ஜயகுமாரன் என்னும் பெயரை மறந்திரார் என்பது திண்ணம். துப்பறி வீர சிங்கம் என்று கற்றோர்களாலும் மற்றோர்களாலும் போற்றப்படும் ஜயகுமாரன் என்னும் வீரனே அம்மாளிகையில் வதிந்து வந்தான்.

மாலை ஐந்து மணியிருக்கும். அருக்கன் ஆழ்கடலில் ஆழுஞ்சமயம். அதுகாலை அரங்க விலாசத்துள் ஒரு பெரிய மோட்டார்வண்டி நுழைந்தது. மாளி



கையின் முன் அவ்வண்டி நின்றதும் ஒரு பணியாளன் அவ்வண்டியை யணுகினான். வண்டியுள்ளிருந்தவர், "ஜயகுமாரர் இருக்கின்றாரா?" என்று வினவினர்.

"இருக்கின்றார்" என்று பணியாளன் பதிலீந்தான். உடனே வண்டியுள்ளிருந்தவர் ஒரு சிறு கார்டை யெடுத்து அப்பணியாள னிடமீந்து, "அவரிடம் இக்கார்டை யீந்து நான் அவரைப் பார்க்கவேண்டும் என்று கூறிடு" என்றார்.

பணியாளன்:—ஐயா! அவருக்கு உடம்பு சௌக்கியமில்லை. கொடிய தலைவலியால் மிகவும் வாடுகின்றார். எனவே நீர் அவரை இப்பொழுது காணவியலாது.

வண்டியுள் ளிருந்தவர் :— நான் அவரை அவசியம் பார்க்க வேண்டும். இக்கார்டை அவரிடம் அளித்திடு.

பணி:—ஐய! ஒருவரையும் பார்க்க இயலாது என என்னைக் கூறிடுமாறு அவர் எனக்குக் கட்டளையிட் டிருக்கின்றார். நான் என்னசெய்வேன்?

வண்டி உள்ளிருந்தோர் :—அப்பா! நான் மிகவும் முக்கிய விஷயத்திற்காக ஈண்டு வந்தேன். நான் அவரை இன்று பார்த்திட வேண்டும். நீ அந்தக்கார்டை அவரிட மெடுத்துச்செல். அவர் பார்க்கவியலாதென்று கூறினால் என்னிடம் கூறிடு. ஆனால், நான் அவரை ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்யவே பல காதங்களுக் கப்பாலிருந்து இங்கு இதுகாலை வந்தேன் என்பதைக் கூற மறவாதே.

பணி:—ஐயா! "அவர் உம்மைப்பார்ப்பது சந்தேகமே. எனினும் உமக்காக இக்கார்டை யான் எடுத்துச் செல்கிறேன்" என்று கூறிவிட்டு இல்லத்துள் சென்றான்.

இப்பணியாளன் யாவனென நமது ஏனைய நாவல்களை வாசித்த அன்பர்கள் ஊகித்தலாகும். கரிய மேனியும் சிவந்த கண்களும், இருண்ட மீசையு முடைய இப்பணியாளன் ஜயகுமாரனுடன் எண்ணிறந்தமுறை துப்பறித்திறனை வெளியிட்டவனாவன். எண்ணிறந்த முறை ஜயகுமாரனுடைய உயிரையுங் கள்ளர்களிடத்து நின்றுங் காத்திட்ட பெரும் புகழுடையவன். இத்துணைச்சிறப்புமிக்க இவன் பல வாண்டுகளாக ஜயகுமாரனுடைய உண்மைப்பணியாளனாக இருந்துவருகிறான். இவனுக்குச் சத்தியநாதன் என்று பெயர்.

மோட்டார் வண்டியில் வந்தவர் அளித்த கார்டை சத்திய நாதன் எடுத்துச்சென்று ஜயகுமாரனுடைய அறையை அண்மி, "ஐயா! யாரோஒருவர் ஒரு மோட்டார் வண்டியில் வந்திருக்கிறார். உமக்குத் தலைவலி யென்றும் ஒருவரையும் பார்க்க இயலாதென நீர் கட்டளையிட்டுள்ளீ ரென்றும் யான் அவர்க்குரைத்தும், அவர் ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றி உம்மிடம் பேசப் பல காதங்களுக் கப்பாலி னின்றும் வந்துள்ளேன் என்று கூறி இக்கார்டை உம்மிடம் அளிக்கக் கூறியுள்ளார்" என்று அக்கார்டை ஜயகுமாரனிட மீந்தான்.

ஜயகுமாரன் கார்டை ஒரு முறை நோக்கினான்.

சந்திரசேகரப் பிரபு,

மங்களபுரி ஜமீந்தார்

என்று அக்கார்டில் வரையப்பட்டிருந்தது. அதனைக் கண்டவுடன், ஜயகுமாரன் "சத்தியநாத! உடனே நீசென்று அவரை இங்கு அழைத்துவா. அவர் ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றி என்னிடம் பேச வந்திருக்கிறாரெனத் தோன்றுகின்றது" என்றுரைத்தான். உடனே சத்தியநாதன் அவ்வறையி னின்றும் வெளிப்போந்து வண்டியுள்ளிருந்தவரிடம் ஜயகுமாரன் அவரைப் பார்க்க இசைந்ததாகக் கூறி, அவரை அழைத்தான். வண்டியுள்ளிருந்தவரும் வண்டியிலிருந்து கீழிறங்கினார்.

மங்களபுரியின் ஜமீன்தாராகிய சந்திரசேகரப் பிரபு தன்னைக் காணவந்த

காரணம் யாதென ஜயகுமாரன் யோசித்தான். சென்னைக்குச் சுமார் எண்பது காதங்களுக்கப்பாலுள்ள மங்களபுரியிலிருந்து சந்திர சேகரப் பிரபு தன்னைக் காணவந்ததை நோக்க, ஒருகொலை, இன்றேல், ஒரு கொள்ளையே அதற்குக் காரணமாக இருத்தல் வேண்டுமென எண்ணினான். ஜயகுமாரனைக் கண்டு அவனுடைய உதவியை நாடுவோரனைவரும், ஒருகள்வனையேனும், இன்றேல் ஒரு கொலைப்பாதகனை யாயினுங் கண்டு அவனுக்குரிய நீதியை வழங்கிடுமாறே அவனை வேண்டுவர். துப்பறிபவனாகிய ஜயகுமாரனை "கொலை" "கொள்ளை" என்னும் இரண்டு அரிய விஷயங்களைப் பற்றியல்லாது மற்றெவ் விஷயங்களுக்காக மக்கள் அணுகுவர்!

இவ்வாறு ஜயகுமாரன் யோசித்துக் கொண்டிருக்கையில், ஜயகுமாரனுடைய செவியில் ஒரு பூட்ஸின் சப்தங் கேட்டது. அச் சப்தத்தினின்றும் சந்திர சேகரப் பிரபு தன்னுடைய அறையை அடைகிறார் என்று ஜயகுமாரன் தெளிந்தான்.

சந்திர சேகரப் பிரபுவும், சத்தியநாதன் பின்தொடர, ஜயகுமாரனுடைய அறையுள் நுழைந்தார். "வாருங்கள் சந்திரசேகரப்பிரபுவே! இந்தச் சோபாவில் அமருங்க" ளென ஜயகுமாரன் அவருக்குபசாரம் மொழிந்தான். அவனுடைய இயற்கைக் குணத்திற்கேற்ப, ஜயகுமாரனுடைய கண்கள் சந்திரசேகரப் பிரபுவை ஒருமுறை முடியிலிருந்து அடிவரை ஆராய்ந்தன. சந்திரசேகரப் பிரபுவின் உயர்ந்த உருவமும், நீண்ட கரங்களும், அகன்ற நெற்றியும், பரந்த கண்களும், கூரிய பார்வையும், வளைந்திருண்ட புருவமும், அவர் அணிந்திருந்த உடையின் தூய்மையும் அவர் ஓர் உயர்குலத்தவர் என்பதை விளக்கியதுடன் அவருடைய வாடியவதனம் அவரகத்தை யொருபெருங் கவலை குடிகொண்டு வாட்டியதென்றும் விளக்கின. "ஜயகுமாரரே! உமக்குக் கொடிய தலைவலி யென்றறிந்தேன். இச் சமயம், உமக்கிச் சிரமம் அளித்ததற்காக மன்னியும்"

பிரபுவே! எனக்குத் தலைவலியின் கொடுமை மிகுதியாக இருக்கிறதெனினும், நீர் என்னை அவசியம் பார்க்க வேண்டிவந்தது அறிந்தேன். ஆகையால்...."

"ஆம் ஜயகுமாரரே! எண்பது காதங்களுக்கப்பாலிருந்து யான் உம்மை ஓர் அவசிய விஷயத்தில் எனக்கு உதவி புரியுமாறுவேண்டவே இங்குவந்தேன்" "பிரபுவே! என்னால் இயன்ற உதவியை உமக்காற்றத் தடையில்லை. விஷயத்தை விளக்கும்"

ஜெயகுமாரரே! தலைவலியால் வாடிடும் உமக்கு என்னுடைய துயரமிகுந்த சரிதையை இயம்ப மனமெழவில்லையெனினும், துரோகி! நன்றியற்ற பேயன்!....ஆ...."

பிரபுவே! வருத்தமுந் தேயும். உம்மை யொருபெரும் வாட்டம் வாட்டிநிற்கின்றதென யான் அறிவேன். தயவுசெய்துஅமைதியுடன்உமக்குஇத்தகைய வெகுளியையும் வருத்தத்தையு மளிக்கும் விஷயத்தை விளக்கும்" "ஜயகுமாரரே! நினைக்கும் போதே என்னுடைய மனம்பதைக்கின்றது. இத்தனையாண்டுகளாக யான் செய்து வந்த "பேருதவிகளுக்கு அப்பாதகன்...ஆ.." பிரபுவே! இவ்வாறு வருந்துதல் ஆண்மகட்கழகாமோ? சற்றுப் பொறுமையுடன் உம்முடைய துன்பத்திற்குங் கோபத்திற்கும் அடிப்படையாக உள்ள காரணத்தை விளக்கும்."

"ஜயகுமாரரே! நீர் என்னுடைய நிலைமையிலிருந்து, யான் இதுகாலை அநுபவிக்கும் மனோ வேதனையையும் உணருவீராகில், இம்முறையில் பேசீர். எனக்குச் செல்வத்தையும் கல்வியையும் அளித்த ஆண்டவன் மாறாக்கவலையுள் என்னை இளமையிலேயே ஆழ்த்திவிட்டான். அத்துயர் சென்ற முப்பது ஆண்டுகளாக என்னை வாட்டி நிற்கின்றது. உலகில் என்னுடைய வாழ்க்கை



சென்ற முப்பது ஆண்டுகளாக எழிலற்றே கிடக்கின்றது. தமிழ் அகத்தின் பண்டைய நாகரிகம்அருகிப் பெண்ணுலகம் ஆணுலகிற்கு அடிமை யென்னும் மிருகவுணர்ச்சியேற்பட்டதே அதற்குக் காரணமாகும்."

"பிரபுவே! உமக்கு முப்பதாண்டுகளுக்கு முன்னால் பிறந்தெழுந்த துயரம் காதலால் ஏற்பட்டதோ?

"ஆம்....ஜயகுமாரரே!....ஆம்....தூய காதலால் - காமங்கலவாக் காதலால் - ஏற்பட்டதே யாகும். என்னுடைய இந்த இரகசியத்தை உலகம் அறியாது. சென்ற முப்பது ஆண்டுகளாக அந்த இரகசியம் எனதுள்ளத்தில் பதிந்து அல்லும் பகலும் என்னை வதக்கி நின்றது. ஆனால், இன்று யான் அதனை உமக்குக் கூறுகின்றேன். அதனை இன்று உம்மிடங் கூறல் எனக்குச் சிறிது ஆறுதலை யளிக்கின்றது; அதனை உமக்குக் கூறவேண்டுவதும் அவசியமாக இருக்கின்றது."

"பிரபுவே! நீர் உம்முடைய இரகசியத்தை உமக்கு விருப்பமில்லாவிடின் எனக்கு அறைய வேண்டியதில்லை. ஆனால், நீர் என்னுடைய உதவியை நாடும் விஷயத்திற்கு அந்த இரகசியம் சிறிது உதவியாற்றிடுவதாக விரும்பின் நீர் அதனை எனக்கியம்பும்"

"ஜயகுமாரரே! இன்று யான் கண்டறிந்த விஷயம், என்னகத்தில் பலவாண்டுகளாகப் பதிந்து கிடக்கும் அந்த இரகசியத்துடன் சம்பந்தப் பட்டே இருக்கின்றது. ஆதலின், அதனை யான் உமக்குச் சுருங்கக் கூறுகின்றேன். உம்முடைய காலத்தை யான் வியர்த்தமாக்குகிறதற்காக நீர் என்னை மன்னியும்."

"பிரபுவே! பிறருடைய இன்னல்களை இறைவனருளால் களைந்திடுவதையே இறைவன் தொண்டாகவும் என்னுடைய மதமாகவும் யான் கொண்டுள்ளேன். மேலும் இது சமயம் என்னிடம் ஒரு வழக்குமில்லை. எனவே, நீர் விளக்கமாக - விரிவாக - எனக் களிக்கப்படும் வழக்குடன் சம்பந்தப்பட்டதென நீர் எண்ணும் விஷயங்களை யெல்லாம் கூறும்."

"ஜயகுமாரரே! சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் சென்னையிலிருந்து வேனிற்கால விடுதலைக்கு மங்களபுரிக்கு வந்தேன். அதுகாலை என்னுடைய அம்மான் மகளாகிய காந்தாமணி.......ஆ! ஈச!.......அங்கு வந்திருந்தாள். இளமையிலிருந்து யானும் காந்தாவும் ஒன்றாக வளர்ந்தவர்கள். என்னுடைய அன்னைக்கு யான் ஒரே மைந்தனாதலானும், பெண்கள்மீது மிகுந்த அன்பு என்னுடைய தாய்க்குண்டு ஆதலானும்,காந்தா என்னுடைய வீட்டிலேயே வளர்க்கப் பட்டாள்என்று கூறினும் பொருந்தும். இளமையிலிருந்தே யானும் காந்தாவும் ஒருவரை யொருவர் நேசித்து வந்தோம். ஆண்டுகள் பல கழியக் கழிய அவ்வன்பு தூய காதலாகமாறியது. இடையில் கல்வியினிமித்தம் யான் சென்னைக்கு வந்தேன். ஓர் ஆண்டின் இறுதியில் நான் மங்களபுரிக்குச் செல்லுங்கால் அவளைக் கண்டேன். அன்றே அவளும் அங்குவந்தாளென அறிந்தேன். ஜயகுமாரரே! அன்று யானுங் காந்தாவும், இளமையிலிருந்து எங்களிடையில் நேசமாகவும் அன்பாகவும் வளர்ந்து இறுதியில் காதலாக மாறிய உண்மையை உணர்ந்தோம்; ஒருவரை யொருவர்மணந்து இல்வாழ்க்கை நடத்துவதெனவும் துணிந்தோம். யான் சிலதினங்கள் காந்தாவுடன் மங்களபுரியிலேயே இருந்தேன். ஒருநாள் நான் என்னுடைய விடுதலை கழிந்தமையால் சென்னைக்குவரப் புறப்பட்டேன். அன்றுமாலை யானும் காந்தாவும் எங்களுடைய காதலைப்பற்றி நெடுநேரம் பேசிக்கொண் டிருந்தோம். அதுகாலை, இறுதியில் யான் "என்னுயிரினும் உயர்ந்த என்னருங் காந்தா! உன்னை விட்டுப்பிரிய என்மன மெழவில்லை. மூன்று மாதங்கள் பொறுத்துக் கொள். என்னுடைய பரீக்ஷையில்தேறிவிட்டு யான் வீடுவந்து சேர்வேன். பின்

ளர் யானும் நீயும் காதல காதலியாய் நிற்றல் நீத்து, மணவினை முடித்து இல்லாளும் இல்லானுமாய் நல்லறமாம் இல்லறத்தை இனிது நடாத்தலாம். அதுகாறும் பொறுத்துக் கொள்” என்று வருத்தத்துடன் மொழிந்தேன். அம்மொழிகளைக் கேட்டதும் காந்தாவின் முகம் மாறியது; அவளுடைய கண்கள் ஊற்றென நீரைப்பெருக்கின. “காதல! உம்மைப்பிரிந்து யான் என்செய்வேன்? உம்முடைய பிரிவினையை யெவ்வாறு சகிப்பேன்” என்று வாய்விட்டலறினாள். ஜயகுமாரரே! அக்காட்சியை இப்பொழுது நான் என் மனக்கண்ணால் காண்கிறேன். வாடியமுகத்துடன் என்னருங் காந்தா கண்ணீர் வெதும்பக் கதறுங் கோறத்தை இன்னும் யான்காண்கின்றேன். ஆனால், அவளை இனி யான் உயிருடன் காணப்போவதில்லை.....ஆ! காந்தா!........அவளை யான் ஒருவாறு தேற்றிவிட்டுச் சென்னைக்கு வந்துவிட்டேன். சென்னையில் யான் காந்தையை மறந்தேனில்லை. சென்னையின்மேனாட்டு நாகரிகத்தின் தடபுடல் காந்தாவின் மீது யான்கொண்டமெய்க்காதலை மாற்றவில்லை. அல்லும் பகலும் காந்தாவின் உருவம் என்னைக் கையாட்டி அழைப்பது போலும் எனக்குத் தோன்றியது. இவ்வாறு யான் ஒரு மாதங் கழித்தேன். ஒருநாள் ஒரு கடிதம் எனக்கு வந்தது. 1902-ம் ஆண்டு ஜனவரிமாதம் 15-ந் தேதி அக்கடிதம் எனக்கு வந்தது. ஆம். அப்பாழும் காலை யான் எவ்வாறு மறக்க வியலும்! அன்றிலிருந்தன்றோ என் இன்ப வாழ்க்கை இடிப்புண்டது! என்னுடைய எண்ணமெல்லாம் அழிந்தொழிந்தன. என்னருங் காந்தாவையும் யான் இழக்க நேர்ந்தது. அன்றிருந்து ஜயகுமாரரே! என்னுடைய வாழ்க்கையே மாறியதெனக் கூறினுங் கூறலாம். அக்கடிதத்தை ஆவலுடன் பிரித்துப்பார்த்தேன். அது ஒரு திருமணப் பத்திரிகையாயிருந்தது.

மிதுனபுரி ஜமீந்தார்
கருணாகரப் பிரபுவுக்கும்
காந்தாமணியம்மாளுக்கும்

என்ற பெயர்களை நோக்கியதும் அத்திருமண அழைப்பு என் கைகளினின்றும் நழுவியது. “ஆ! காந்தா!” என்றலறினேன். இடியுண்ட நாகம்போலும் இடிப்புண்டேன். துயரம் ஒருபாலுங் கோபம் ஒருபாலும் என்னகத்தில் பொங்கி எழுந்தன. “அடி பாதகி, என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட பாதகி, எனக்கு ஆசை காட்டி மோசம் செய்தாயோ” என்று அலறினேன்; என்னையுமறியாது என் கண்கள் நீரைத் தாரை தாரையாகச் சொரிந்தன. ஜயகுமாரரே! அன்றிருந்து அவளுடைய முகத்தில் விழித்தலாகாது என்றுதிடஞ் செய்துகொண்டேன். இனி இவ்வுலகில் எனக்கின்பமில்லை யென்பதுணர்ந்தேன். இறைவனொருவன் உண்டோ என்னும் சந்தேகமும் எனக்குண்டாயிற்று. ஜயகுமாரரே! உம்முடைய அரிய காலத்தை யான் என்னுடைய சரிதையைக் கூறி வியர்த்தமாக்குகிறேன். ஆனால் மன்னியும்: சுருக்கமாகவே கூறி முடித்துவிடுகிறேன்.”

“பிரபுவே! யான் உமக்கு முன்னரே எனக்கு வேறு வேலை யொன்றுமில்லையென்று கூறினேனே. ஆதலால் நீர் உம்முடைய இஷ்டப் பிரகாரம் உம்முடைய பரிதாப சரிதையை இயம்பும். காலதாமதமாகின்றதென நீர் சிறிதுங் கவலைகொள்ளவேண்டியதில்லை. எனவே சிறிதுந் தயங்காது உம்முடைய சரிதையைக் கூறும்.” அந்த நிமிடத்திலிருந்து யான் பித்தேறியவன் போலும் ஆயினேன். மனோவேதனை என்னைப் பித்தனாக்கியது என்று கூறலும் ஒவ்வும். சில தினங்களுள் யான் நோய் வாய்ப்பட்டேன். மங்களபுரிக்கு யான் சென்னையிலிருந்துவந்து விட்டேன். சுமார் ஒரு மாதம் நான் இறக்கும் நிலையில் என்னகத்திற் கிடந்தேன். அவ்வாறு யான் ஸ்மரணையின்றி நடைப்பிணம் போலும் இருந்த நாட்களுள்



என்னையு மறியாது யான் பிதற்றிய பிதற்றல்களிலிருந்து என்னுடைய அன்னையார் என் இரகசியத்தை யுணர்ந்தார். அவர் ஒரு ஜமீந்தாரணியாக இருப்பினும், தாய்மை மிகுந்தவர். ஏனைய ஜமீந்தாரணிகளைப் போலும் மிருகங்களுக் கொப்பாக ஆணவத்தில் ஆழ்ந்து கிடப்பவரல்ல. யான் வியாதியாக இருக்கையில், அல்லும் பகலும் என்னருகிலிருந்து என்னைக் காத்தவர். என்னைக் கவனிக்க டாக்டர்களும் நர்ஸுகளும் ஏனைப் பணியாளர்களும் இருந்தார்கள்; எனினும், புத்திர வாஞ்சையும் தாய்மையும் நிறைந்த என் அன்னையார் என்னை அருகிலிருந்து காத்தார் என்றுங் கூறலாம். எனவே, என்னுடைய அன்னையார் என்னுடைய பிதற்றலிலிருந்து என் வியாதியின் முக்கிய காரணத்தை உணர்ந்தார் எனினும் அதனை என்னிடம் அறிவித்தாரில்லை. யானும் ஒருவாறு தேறினேன். ஆனால், என் மனக்கவலை என்னை விட்டகன்றதில்லை. காந்தாமணியுங் கருணாகரப் பிரபுவை மணந்தாள்; மிதுனபுரிஜமீன் தாரணியாயும் ஆயினள்.

“ஒரு நாள் யான் என்னுடைய அரசன் மனையைச் சார்ந்த சிங்காரவனத்தில் வழக்கம்போல் உலவிக்கொண்டிருந்தேன். அதுகாலை ஒரு மோட்டார் வண்டி என்னுடைய அரண்மனையுள் நுழைந்தது. வண்டியுள் நோக்கினேன். என்னுடைய வாழ்க்கையை வீணாக்கிய காந்தாவை ஆங்குக் கண்டேன். ஒரு திங்களின்முன் எனக்குரியவளாக இருந்த காந்தா! - என் உயிரினும் இனிய காந்தா! - மிதுனபுரி ஜமீன்தாரணியாகியதை எண்ண என் மனம் புழுங்கியது. ஜயகுமாரரே! என்னையுமறியாது யான் அதுகாலை கண்ணீரும் விட்டேன். அவளைப் பார்க்கவும் அவளுடன் பேசவும் எனக்குரிமையில்லை யென எண்ணினேன். அவளைப் பார்த்தலாகாதென வுன்னினேன். எனவே, யான் கவனியாது போலும் தோட்டத்திலேயே சுற்றித் திரிந்தேன். காந்தாவும் வண்டியிலிருந்து இறங்கி அரண்மனையுள் சென்றாள். சென்ற சில நிமிடங்களுள் என்னுடைய அன்னையார் என்னை அழைப்பதாக ஒரு பணியாளன் என்னிடம் வந்தியம்பினான். உண்மையில் எனக்கு அங்குச் செல்ல மனமெழவில்லை. எனினும், என்னுடைய அன்னையார்க்கு விரோதமாக ஒரு காரியமுஞ் செய்தறியாத எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. மெதுவாக நடந்து அரண்மனையுள் நுழைந்தேன். ஊஞ்சலில் காந்தாவும் என்னுடைய அன்னையும் வீற்றிருந்தார்கள். காந்தாவின் முகத்தை நோக்கினேன். அது வாட்டமுற்றிருந்தது. மிதுனபுரி ஜமீந்தாரணியாகிய காந்தா மலர்ந்த முகத்துடன் ஆங்கு வீற்றிருப்பது நீத்து வாடிய முகத்துடன் அமர்ந்திருத்தலைக் கண்டதும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒரு முறை வெறுப்புடன் காந்தாவை நோக்கினேன். காந்தாவின் கண்களில் நீர் மல்கிற்று. எனக்கொன்றும் விளங்கவில்லை. என்னுடைய அன்னையாரை நோக்கினேன். அவர் என்னையே கவனிப்பதறிந்தேன். என்னகத்தை வாட்டும் இரகசியத்தை அவர்கள் அறியார்களென்றே யான் எண்ணியிருந்தேன்; நான் நோய்வாய்ப் பட்டுக் கிடக்கையில் பிதற்றிய பிதற்றல்களினின்றும் என் இரகசியத்தை உய்த்துணர்ந்ததை யானறியேன். “அம்மா! நீர் என்னை அழைத்தீர்களாமே” என்று வினவினேன். “ஆம்! சந்திர சேகர! இது காறும் வியாதியாயிருந்த நீ அதிகமாகக் காற்றில் உலவலாகாதென்றே உள்ளழைத்தேன்” என்று என்னுடைய அன்னையார் பகிலீந்தார். அவ்விடை எனக்குச் சந்தேகத்தையே விளைத்தது. “காந்தா வந்திருப்பதை அறிவித்தல் நீத்து வழக்கத்திற்கு மாறாக இப்பதிலை யீந்தது, ஒருகால் என்னுடைய இரகசியத்தை என்னுடைய அன்னையார் அறிவாரோ என்று என்னைச் சந்தேகியுமாறுஞ் செய்தது. யான் சில நிமிடங்கள் அங்கு நின்றேன். பின்னர் அங்குக் காந்தாவின் முன் அமரவும் அவளுடன் பேசவும்

என் மனமெழவில்லை. என்னறைக்குச் செல்லலாம் என்று அடியெடுத்து வைத்தேன். "அண்ணு!" என்று என்னை அழைத்த காந்தாவின் குரலோசை என் செவியில் பட்டது. காந்தா என்னை இளமையிலிருந்தே "அண்ணு" என்றழைப்பது வழக்கம். எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. திரும்பியும் பார்க்க என் மனம் இசைய வில்லை. சிறிது நேரம் வாளா நின்றேன். "ஆம் உமக்கும் என்மீது வெறுப்புற்றது போலும். இறைவனும் என்னைக் கைவிட்டான். யான் இருத்தலினும் இறத்தலேநன்று" என்று காந்தா அறைந்தாள். என்னுடைய தீர்மானங்கள் பறந்தன; என்னுடைய கோபம் மறைந்தது; அந்நிமிடம் என் துயரமும் ஒடுங்கியதென்றுங் கூறலாம். உடனே திரும்பிக் காந்தாவை நோக்கினேன். அவள் கண்ணீர் விட்டுக்கொண்டு என்னையே நோக்கினாள். என் மனங் கரைந்தது. யான் சென்று அவளெதிரிலிருந்த ஒரு சோபாவிலமர்ந்தேன். பேசமுயன்றேன்; ஆனால் என் நாவெழவில்லை. துயரம் என் வாயை அடைத்தது. யான் காந்தாவை நோக்கினேன். காந்தா என்னை நோக்கினாள். என்னுடைய இரகசியத்தை இரகசியமாக உணர்த்த என்னுடைய அன்னையார் உடனே எழுந்து ஏதோ ஒரு வேலையாகச் செல்வது போலுஞ் சென்றுவிட்டார். யானுங் காந்தாவுந் தனியாகப் பேசல் நன்றென உன்னியே அவர் அவ்வாறு செய்தார் என்பதுணர்ந்தேன். அப்பொழுது காந்தா என்னை ஒருமுறை ஏறவிறங்க நோக்கி "அண்ணு! வியாதியின் கொடுமையால் நீர் மிகவும் மெலிந்து விட்டீரே" என்றாள்.

"ஆம் என்ன செய்வது! என் மனோவியாதி என்னைத் துரும்பாக்கிவிட்டது. என்னைப்பற்றிக் கவலையுங் கொள்வாருண்டோ" என்று யான் பதிலீந்தேன்.

"அண்ணு! உம்முடைய மொழிகள் கூரிய வேலைப்போலும் என் அகத்திற் பாய்கின்றன. உம்முடைய மனோவியாதிக்கு முக்கிய காரணம் யானேயன்றோ?!" என்று காந்தா வினவினாள்.

"நீயே அதனை அறியாயா?" என்று நான் வினவினேன்.

"என் மீது உமக்கிருக்கும் வெறுப்பால் என்னைப் பெயரிட்டழைக்கவும் உமக்கு மனம் வரவில்லையன்றோ! உம்முடைய வாழ்க்கையை அழித்த அரக்கியென்றல்லவோ நீரென்னை மதிக்கின்றீர். உமக்காசை காட்டி மோசஞ்செய்த மாயப் பிசாசமென்றல்லவோ நீர் எண்ணுகிறீர்! உம்முடைய வாழ்க்கையைப்போலும் உம்முடன் இளமையிலிருந்து வளர்ந்து உம்மை உயிரென மதித்த, என்னுடைய வாழ்க்கையும் இடிப்புண்டதை நீர் எண்ணவில்லையே! காதல் கடுகளவுமில்லாத இக்காமமணம் எனக்கு இன்பத்தையூட்டுமென்று நினைந்தீரோ? இன்றேல் உம்மைக் காதலிக்கின்றேன் என்று யான் கூறியது வெளிமயக்கென்று எண்ணினீரோ? அண்ணு! ஆண் உலகிற்கு உரிய உரிமை எனக்குமிருந்திருக்குமேல் யான் உம்மையே மணந்திருப்பது சத்தியம். ஆனால் பாழும் பெண்ணுலகிற் பிறந்த யான் அடிமையன்றோ? எனக்கும் ஓர் உரிமையுண்டோ? என்னுடைய அன்னையின் கட்டளைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப அடிமை யுலகினைச் சார்ந்த யான் என் இன்ப வாழ்க்கையை நீத்து, என் அன்னையின் உடன் பிறந்தோராகிய மிதுனபுரி ஜமீந்தாரை மணக்க நேர்ந்தது. உண்மையை அறியாது நீர் என்னை வெறுப்பதில் பயனென்? பண்டை நாகரிகம் இன்று நந்தமிழகத்தில் நிலவ யான் பிழைத்திருப்பின் நான் செய்தது தவறேயாகும். தற்கால நாகரிகத் தடபுடலில் உரிமையை யுடையோர் போலும் திரியும் அடிமையுலகை யண்மியுள்ள என்னை நீர் பழிப்பதில் பயனென்! உம்மீது கொண்ட காதல் உயிருள்ளளவும் மாறாது. இப்பிறவியிலில்லாவிடினும் அடுத்த பிறவியிலேனும் யான் உம்மை நாதனாக வரிப்பேன். இறைவனும் அருள் புரிக; பெண்ணுலகின் அடிமைத் தத்துவம் ஒழிக." என்றுகூறி காந்தா கண்ணீர் விட்டாள்.



இம்மொழிகளைக் கேட்டதும் யான் உண்மையை உணர்ந்தேன். மிதுனபுரி ஜமீந்தார் காந்தாவினுடைய அம்மான். எனவே, காந்தாவின் தாய் அவளை அவருக்கீந்தாள் என்னும் மெய்ம்மையை ஓர்ந்ததும் காந்தாவை யான், நம்பகத்துரோகி என்று எண்ணியது தவறென உணர்ந்தேன். காந்தா என்னையே காதலிக்கின்றாள் என்பதறிந்ததும், என்னுடையதுயரம் பறந்தது. அவளைமணந்து இல்வாழ்க்கை நடத்த இனி ஒல்லாதெனினும், விதிவசத்தாலும், அன்னையின் விருப்பத்தாலும் பெண்ணுலகின் அடிமைத்தனத்தாலும் அவள் வேறொருவருக்கு வாழ்க்கைப் பட்டாள் எனினும், அவள் என்னைக்காதலிக்கின்றாள் என்ற உண்மையே என்னுடையவாழ்க்கையை நடாத்தும் என யான் உன்னினேன். பெண்ணுலகின் அடிமைத்தனத்தை ஒழித்தலே என்னுடைய கடனென்றும், மணமின்றியே நான் என் வாழ்நாட்களைத் தொண்டில் கழித்தல் வேண்டுமெனவுங் கருதினேன். 'அண்ணு! என்ன யோசிக்கின்றீர்கள்?' என்று காந்தா வினவினாள். "காந்த! யானெண்ணியது தவறென்று அறிந்தேன். நீ இன்னமும் என்னைக் காதலிப்பதுணர்ந்தேன். இனி யாம் நம்முடையகாதலை சகோதர வாஞ்சையாக மாற்றி உயிருள்ளளவும் சகோதர சகோதரி சம்பந்தத்துடன் நடத்துவோம். ஆம். தங்காய்! அடிமையெனக் கருதப்படும் பெண்ணுலகின் உரிமையை நாட்டுவதிலேயே நான் என் வாழ்நாட்களைக் கழித்திடுவேன்" என்று கூறினேன். உடனே காந்தாவின் முகம் மலர்ந்தது. ஜயகுமாரரே! சுமார் முப்பதாண்டுகளுக்கு முன் நடந்த விஷயங்களையெல்லாம் ஒன்றையும் விடாது இன்றுயான் கூறுவது எனக்கே ஆச்சரியமாகஇருக்கின்றது. என்னுடையசரிதை மிகவும் வளர்கின்றது. எனவே, யான் இனி அதனைச் சுருங்கக் கூறல் அவசியம். ஐந்து ஆண்டுகள் கழிந்தன. அடிக்கடி யான் மிதுனபுரிக்குச் சென்று காந்தாவைக் காண்பதுண்டு. காந்தாவும் மங்களபுரிக்கு வந்து என்னைக்கண்டு செல்வதுமுண்டு. காந்தாவின் கணவனாகிய கருணாகரப் பிரபுவும் என் நண்பராயினார். அவரென்னைத் தம்முடைய சகோதரன்போலும் நேசித்துவந்தார். காந்தாவின் தாய் தந்தையரும், என்னுடைய தந்தையும் இறந்துபட்டனர். அதுகாலை காந்தா இரண்டு ஆண் மகவுகளுக்கு அன்னையாகவும் இருந்தாள். அக் குழவிகளுள் மூத்தவன் பெயர் சண்முக சுந்தரம்; இளையவன் பெயர் மோகன சுந்தரம். இளையவனுக்கு அதுகாலை வயது ஓராண்டிருக்கும். கருணாகரப் பிரபு ஒருநாள் திடீரென்று விடமருந்தி இறந்தார். அவர் எனக்கு ஒரு லிகிதம் வரைந்திருந்தார். அதனையான் வாசிக்க, அதில் கருணாகரப் பிரபு குதிரைப் பந்தயத்தில் லக்ஷக் கணக்கான பொருளைச் சூதாடி விட்டதாகவும், எனவே, மிதுனபுரி ஜமீனே சீக்கிரத்தில் விற்கப்படுமென்றும், ஆதலின்காந்தாவையும், அவளுடைய இருகுழந்தைகளையும் யானே காப்பாற்ற வேண்டுமென்றும் வரைந்திருந்தார். இவ்வுண்மையையுணர்ந்த என்னன்னையார் காந்தாவையும் அவளிரு கண்மணிகளையும் மங்களபுரிக்கு அழைத்துச் சென்றார். யான் மிதுனபுரி ஜமீனையும் பணமீந்து வாங்கிக்கொண்டேன். கருணாகரப் பிரபுவின் தற்கொலை காந்தாவைத் துன்பத்திலாழ்த்தியது. காந்தா கருணாகரப் பிரபுவைக்காதலிக்க வில்லையென்று கருணாகரப் பிரபு அறிவாரெனினும் அவர் அவளை உண்மையாகக் காதலித்து வந்தார். யான் மிதுனபுரி ஜமீனை வாங்கியதைக்காந்தா அறியாள். எனவே, தானும் தன்னிருமைந்தரும் அநாதைகளாகவும் ஏழைகளாகவும் மாறிய தெண்ணி, அவள் விசனமடைந்தாள். ஒரு நாள் நான் அவளிடம் உண்மையை உரைத்து, "காந்த! நான் என்னுடைய அன்னைக்கு ஒரே மைந்தன். நீயே இளமையிலிருந்து என்னுடைய தங்கையைப்

போஹும் என்னன்னையாள் வளர்க்கப்பட்டவள். நீ இவ்வாறு வித்தியாசம் பாராட்டுவது நன்ருே? நானே மணமின்றிக் காலங்கழிக்க வெண்ணியுள்ளேன். எனவே, என்னுடைய ஜமீனும், இப்பொழுது யான் வாங்கியுள்ள ஜமீனுகிய மிதுனபுரி ஜமீனும் உன்னுடைய இருமைந்தரையே சாரும். ஆதலால் நீ கவலையுருதே" என்று கூறினேன். உடனே காந்தா, "அண்ணு! பாவியாகிய என்பொருட்டு நீர் உம்முடைய வாழ்க்கையை நீத்தல் நியாயமன்று. மெய்யின்பத்தை நுகரும் பெரும் பேற்றை யான் பெற்றேனல்லே. எனினும் உம்மை என்னுடைய சகோதரனுகவாயினும் உறவாடப் பெற்றது பெரும் பாக்கியமேயாகும். எல்லாம் வல்ல இறைவன் உமக்கு மாரு இன்பத்தை நல்குவது திண்ணம்"மென அறைந்தாள்.

# தமிழர்கட்கு ஒரு வேண்டுகோள்

[ஒரு தமிழ் மாணுக்கன்]

அன்புள்ள தமிழ்ப் பெரியோர்களே!

தமிழ் மாணவ நண்பர்களே!

"வேண்டுகோள்" என்ருே! யாதோ! என ஐயுறவேண்டாம். பொற்காசு வேண்டவில்லை; பொருள் வேண்டவில்லை; வெள்ளிக்காசு வேண்டவில்லை; விளைபொருள் வேண்டவில்லை; செப்புக்காசுவேண்டவில்லை; செங்கைத்தொழில் வேண்டவில்லை; உடலுழைப்புவேண்டவில்லை; உறுநலம் வேண்டவில்லை.

வேண்டுவது ஒன்றே. உள்ளத்தெழும் எண்ணங்களைத் தெள்ளிய தீந்தமிழில்மொழியும்படி வேண்டுகிறேன். எழுதுவதெல்லாம் அமிழ்தினும்இனிய தமிழில் எழுதும்படி வேண்டுகிறேன்.

தமிழ்நந்தாய்மொழியன்றே! தமிழை விடுத்துப் பிறமொழி கோடல்பெருமை யாருங்கொல்! 'தாய் தஞ்சையில் தன் கைப்பிச்சை யெடுக்கத் தனையன் குடந்தையில் கோவிகை புரிந்தாணும்' என்னே! இவனது அறிவுடைமை! நந்தாய்த் தமிழணங்கை நாம் போற்ற வேண்டாமோ? பிறர் போற்றுவரோ? ஒருகாலும் போற்ருர். போற்றுதல் நங்கடமையாகும்.

அவளை ஏற்றுக்குப் போற்றுதல் வேண்டு மெனில், நன்றியறிதற்கும் ; நன்மை பெறுதற்கு மென்ப. அவள் செய்நன்றி யாதோவெனில்? கூறுதும்:

நாம் இளங் குழந்தையாயிருக்குங் காலத்தில், தனது இனிய இசை கொண்டு நம் இளைப்பை ஆற்றினள். பால்மணம் மாருப் பச்சிளங் குழந்தையில், நம் பசியை மாற்றியது பைந்தமிழ் இசையே. அன்னையர், நமக்குக் கொஞ்சிக் குலாவிக் களிப்பைக் கொடுத்ததும் கன்னித் தமிழே. தொட்டிலை விட்டு சீராட்டியதும் செந்தமிழே. குழலினும் இனிய மழலைச் சொல்லாய்ப் பெற்ருேரைப் பெரு மகிழ்ச்சியிலீடுபடுத்தியதும் பைந்தமிழேயாம். ஐந்தாமாண்டில் அறிவைக் கொடுத்து உதவியது அன்னையாம் அருந்தமிழே. இன்னும், அவள் செய்நன்றியை அளவிடலரிது ; செப்பவும் சேண்மையது.

இங்ஙனமாக இவள் செய்த நன்றியை மறத்தல் நலமாகுமோ? ஆகாது. ஆதலின் அவளை அனைவரும் போற்ற வேண்டுகிறேன்.

அறச்சாலை கட்டுதலும், ஐயமிட்டுண்ணுதலும், பிறவறங்களைப் பேணுதலும் கடமையாகக் கொண்டொழுகும் நாம், நந்தாய் மொழியை வாயினுல் மொழிவதினுல் வருங்குறைபாடு யாது? கைக்கொண்டு எழுதுவதால் வருங் கீழ்மையாது? பிறமொழியாளர்கள் தங்கள் மொழிகளைப்பொன்னேபோல் போற்றுகிருர்கள்.

பெரியீர்! நம்மை அடுத்த ஆந்திர நாட்டை நோக்குங்கள். அம்மொழியின் ஆக்கத்தை அறியுங்கள். அவர்களின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் பாருங்கள். மொழிக்காகச் செய்யும் முயற்சியை நோக்குங்கள்.

இங்ஙனமே, வங்கநாட்டைக் காணுங்கள். அவர்கள் தங்கள் மொழிக்காகக் கைக்கொண்ட முயற்சியைக்கேளுங்கள். வங்க இளைஞர்கள் தம்மொழியைக் கண்களைக்கட்டிக் கொண்டு காத்தார்கள். உடல் பொருள் ஆவி அனைத்தையும் அந்நாட்டு மக்கள் தங்கள் மொழிக்காகத் துறந்தார்கள். அவர்கள் தாய் மொழி சிறப்புற்று இலங்குகிறது; சீர் பெற்றுத் திகழ்கிறது. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ'?

அவர்களைக்கண்டும் நாம் வாளாவிருத்தல் சிறப்போ! எழுமின்; எழுமின். விழிமின்; விழிமின். தெருவெலாந் தீந்தமிழ் முழக்கம் செய்வோம்.



# ஐரோப்பிய போர்ட் (Ford)

## பேர் பெற்ற பாதரட்சை வியாபாரியின் அகால மரணம்

[திரு - வைத்தீசுரன், பி. எஸ். ஸி.]

சில நாட்களுக்கு முன் தன் சொந்த ஏரோபிளேனில் போய்க் கொண்டிருந்தபொழுது பிளேன் உடைந்து அதிலிருந்து விழுந்து பாட்யா உயிர் துறந்தார். இவர் ஐரோப்பிய யுத்தத்துக்குப் பிறகு பிரசித்திக்கு வந்தவர்களில் ஒருவர். உலகத்திலுள்ள பெரிய வியாபாரிகளில் இவரைப் போர்டுக்குச் சமமாகக் கூறலாம். இவர் செய்யும் வியாபாரம், பலவகைப் பாதரட்சைகள் செய்து விற்றலேயாம். ஐரோப்பாவில் ஜெக்கே ஸ்லேவியா வென்னும் இராஜ்யத்தில் ஜிலின் என்னுமிடத்தில், தம் தொழிற்சாலையைக் கட்டியிருக்கிருர். ஆங்கே சுமார் 20,000 ஜனங்கள் வேலை செய்கிருர்கள். இவர் கம்பெனியிலிருந்து வரும் சரக்குகள் உலகத்தில் எல்லாத் தேசங்களிலிலும் விற்பனையாகின்றன. அவ்வாருக வேண்டுமானுல் அதில் பலசூக்ஷமங்கள் இருக்க வேண்டும்.

பாட்யா என்பவர் சிறுவயதினராயிருக்கும் பொழுதே பாதரட்சைகள் செய்யும் வழிகளைச் செவ்வனே தெரிந்துகொண்டு பிறகு அமெரிக்காவுக்குச் சென்று பாதரட்சைகளை ஏராளமாய்ச் செய்யும் வகைகளைக் கற்றுக்கொண்டு வந்து தம்மூரில் ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தினர். முதலில் இருந்த வேலையாட்களைப் போல் இப்பொழுது ஆறு மடங்கு வேலை ஆட்கள் இருக்கின்றுர்கள். அநேகர் வேலை செய்யும்பொழுது வேலையாட்கள் தங்கள் காலத்தை வீணுக்காமலிருக்க வேண்டும். நாளுக்குநாள் செய்யும் சாமான்கள் வாங்குபவர் மனதுக்கு இசைந்ததா யிருக்க வேண்டும். மற்ற வியாபாரிகளின் சரக்கைவிடத் தங்கள் சரக்கு சரசமாய் விற்க முயல வேண்டும். இதுபோன்ற பலவிஷயங்களைக் கவனித்துத் தக்கவழிகளை யேற்பாடு செய்பவர்களின் வியாபாரம் விருத்தியாகும். மற்றவை சில தினங்கள் ஜோதியுடன் தோன்றிப் பிறகு மங்கிக் கடைசியில் இருந்த இடம் தெரியாமல் மறைவது சகஜம்

இத்துடன் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு. அது, வேலையாட்களின் சௌகரியம். அவர்கள் சந்தோஷமாயும் தேக ஆரோக்கிய

முள்ளவர்களாயும் இருந்தால் தான், அவர்கள் செய்யும் வேலையும் உயர்ந்ததாயிருக்கும். அவ்வாறில்லையேல் கடன் வேலைதான். சில முதலாளிகள் தங்கள் தொழிலாளரை எவ்வளவுக் கெவ்வளவு கஷ்டப்படுத்த முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு செய்கின்றனர். அதிக மணி நேரம்வேலைவாங்குகின்றனர்; ஓய்வு சரிவரத்தருவதில்லை. கூலியைக்குறைக்கப் பார்க்கின்றனர். அவ்வாறு செய்யாது பாட்பா என்பவர் வாரத்தில் ஐந்துதினங்கள் வேலை செய்விக்கிறார். ஒவ்வொரு நாளும் காலையில் ஏழுமணிக்கு வேலை தொடங்கி மாலை ஐந்துமணிக்குமுடியும். மத்தியில் பன்னிரண்டு மணிக்கு ஒரு மணி நேரம் போஜனத்துக்காக ஓய்வு கொடுக்கிறார். இத்துடன் கூலிகளுக்காகப் பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளும், மார்க்கெட்டுகளும் இன்னும் அவர்களுக்கு வேண்டிய பலசௌகரியங்களையெல்லாம் உண்டாக்கி யிருக்கிறார். ஒவ்வொருவருக்கும் சரசமானவிலைக்கு நல்ல பசும்பாலை விற்கிறார். அதற்கென்று தனியாக சொந்தப் பசுக்கூட்டம் ஒன்று வைத்திருக்கிறார். வேலைக்காரர்கள் வேலை செய்யும்போது வீணில் ஓரிடமிருந்துமற்றோரிடம் நடவாதபடி சில சௌகரியங்களையுண்டாக்கியிருக்கிறார். ஒவ்வொருவனும் தன்னிருப்பிடத்தி லிருந்து கொண்டே அவன் செய்யவேண்டிய வேலைகளைச் செய்வான். அவனுக்கு முன் பெரிய பெல்ட் ஒன்று சர்ப்பம்போல் அசைந்து கொண்டிருக்கும். ஒருவன் ஒருபாதரட்சைக்கு ஒரு தையல் போடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு செய்தபிறகு அதை அந்த பெல்ட்டின் மேல் வைப்பான். அது அடுத்தவனிடம் போகும்போது அவன் அதை எடுத்து அதற்குத் தான் செய்யவேண்டியதை—லாட ஆணி அடிப்பதென்று வைத்துக் கொள்வோம்—செய்வான்; பிறகு அதை பெல்டின் மேல் வைத்து விடுவான். இவ்வாறு ஓரிடத்தில் தோலாக ஆரம்பித்துக் கடைசியில் வருவதற்குள் நூற்றுக் கணக்கான பாதரட்சைகளாக மாறி அவைகள் பெட்டிகளில் போடப்பட்டு வெளி யேறுகின்றன.

ஆனால் வேலையாட்கள் சோம்பேறித்தனமா யிருப்பார்களென்று கருதல் கூடாது. ஏனென்றால் தொழிற்சாலையின் ஒவ்வொரு பாகமும் அதன் இஷ்டப்படி அதிக வேலையோ கம்மி வேலையோ செய்யலாம். அவரவர்கள் செய்தவேலைக்குத் தகுந்த கூலி கொடுக்கப்படும். ஆகையால் ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற அளவு செய்ய முயலுவான். இத்துடன் தொழிற் சாலையிலுள்ள எவராயினும் தம் திறமையினால் உயர்ந்த மானேஜர் பதவிக்கு வேண்டுமானாலும் வரமுடியும். ஆகையால் அவனவன் தொழிலின் மதிப்பினாலன்றிப் பச்சாதாபத்தினால் மாத்திரம் உயர்ந்த சம்பளத்தைப் பெறமுடியாது. தொழிற்சாலையில் ஒவ்வொரு இடங்களில் சென்ற வாரம் பரிசுபெற்றவர்களின் பெயர்கள், செம்மையில் எல்லோர் கண்களையும் கவருமாறு எழுதப் பட்டிருக்கும். அதைக் கண்ட ஒவ்வொருவனும் தானும் அப்பதவியை அடைய முயலுவான். ஒவ்வொரு சனிக்கிழமையும் மானேஜர்களும் பாட்யாவும் ஒன்று கூடிச் சென்ற வாரத்தின் விஷயங்களையும் வரும் வாரத்தின் விஷயங்களையும் கவனிப்பார்கள். அவ்வாறு செய்வதால் தம்முடைய நூற்றைம்பது பிரிவுகளும் எவ்வாறு இருக்கின்றன, எவ்வாறு விருத்தி யாக்கலாம் என்று கண்டுகொள்வார். ஏதாவது ஓர் யந்திரமாவது அதன் பிரிவாவது அதிக லாபத்தைத் தருவதில்லை யென்று கண்டவிடத்து அதனைக் காட்டிலும் மேலான தொன்றுண்டாக்க முடியுமானால் அப்பொழுதே அதைச்செய்ய ஏற்பாடு பண்ணுவார். அதற்காகப் பொருள் எவ்வளவு ஆனாலும் தயங்கமாட்டார். அயல் ஊர்களில் தம்முடைய கிளைக் கம்பெனிகள் சரிவர நடக்கின்றனவா வென்று தம் ஏரோப்பிளேனில் அடிக்கடி போவார். ரயிலிலும் மோட்டாரிலும் போய்க் காலங்கழிக்க அவருக்கு அவகாசமில்லை. அவ்வாறு முன்னொரு



நாள்போகையில் ஒருதேசத்தை விட்டு மற்றொரு தேசம் புகுவதற்கு வேண்டிய "பாஸ்போர்ட்டை" மறந்து விட்டார். அங்குள்ள அதிகாரிகள் அவரை விடாததினால் அவருடைய காரியதரிசி மறுபடியும் ஜிலினுக்கு வந்து அந்தப் பாஸ்போர்ட்டைக் கொண்டு வந்து காட்டினார். இவருக்கு இந்தச் சாதாரண சட்டங்களெல்லாம் பெரிய தடங்கலாயிருக்கின்றன.

இவ்வளவும் செய்கின்றவருக்கு முக்கிய நோக்கம் யாதெனில் பிறருக்குதவி செய்வதென்பதே. ஒரு நாள் தன் தொழிற்சாலைக்கருகே பழய கட்டடங்கள் இருந்த இடத்தை ஓர் உய்யானவனமாக்கினால் வேலை யாட்களும் மற்றவர்களும் தங்கள் தேக ஆரோக்கியத்துக்காக நடமாடலாம் என்று நினைத்தார். அவ்வாறே செய்ய உத்தரவிட்டார். அதுவும் ஐந்து வாரங்களுக்குள் ஆயிற்று. சாதாரண மானேஜர்கள் தம் வேலையாட்களின் உதிரத்தைக் கரந்து எடுப்பது போல் செய்யாமல் இவ்வளவு நன்மை செய்து வந்த பரோபகாரியின் மரணத்துக்காக யார் துக்கியார்?

இவருக்குப் பிறகு "டாமி" யென்று எல்லோராலும் செல்வமாய் அழைக்கப்படும் குமாரனே இதைப் பார்த்துக் கொள்வான். இவன் பதினேழு வயதிலேயே ஏரோபிளேன் விடக்கற்றுக் கொண்டிருக்கிறான். மற்றக் கூலியாட்களைப்போல் ஒவ்வொரு வேலையையும் தொழிற்சாலையில் செய்து வந்திருக்கிறான். ஆகையால் தான் செய்யாததை வேறொருவர் செய்யும்படி கொடுமை செய்யான். நம் தேசத்தினரும் அவ்வாறு பெருமையடைய வேண்டுமானால் கையினால் வேலை செய்வது கௌரவக் குறைவென்ற தப்பபிப் பிராயத்தை நீக்கி, பாட்யாவைப்போலும் ஹென்றி போர்டைப்போலும் செய்யவேண்டும். வேலையாட்களின் சௌகரியத்தைத் தேடவேண்டும். நாளுக்கு நாள் விருத்தியாக்கும் வழிகளைத் தம் தேசத்திலிருந்தும் அயல் தேசத்திலிருந்தும் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

# அரும் உலோகங்கள்

[திரு. வி. எஸ். கிருஷ்ணசாமி, பி. ஏ.]

உலோகங்கள் மனிதர்களுக்கு எவ்வளவோ வகைகளில் உபயோகப்படுகின்றன. பாத்திரங்கள் செய்யவும், கம்பி, தகடு தட்டுகளாலான சாமான் செய்யவும் இன்னும் கணக்கற்ற வழிகளில் உலோகங்களை நாம் உபயோகிக்கிறோம். எனினும் சுமார் நூறு வருஷங்களுக்கு முன் உலகிற்குத் தெரிந்த உலோகங்கள் மிகவும் சுவல்பமானவைகளே. அவற்றுள் பலம் நிறையவேண்டிய காரியங்களுக்கு எஃகும், பாத்திரம்முதலியன செய்வதற்குத்தாமிரமும் உபயோகப்பட்டு வந்தன. காற்றிற்பட்டுத்துருப்பிடித்தோ, கருத்தோ, மற்றெவ்விதத்திலோ பளபளப்புக்கெட்டு, ஒளிமங்கி அழுக்குற்றோ கெடாதஉலோகங்கள் அபூர்வமாயிருந்தன. இப்பொழுது அவைகளெல்லாம் மாறிவிட்டன. நூறுவருஷங்களுக்குள் ரசாயன பௌதிக ஆராய்ச்சியால் அனேக புது உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அநேகமாய் எல்லாம் உலகினில் சிறிதளவே கிடைக்கின்றன; ஆகவே அவை விலை யதிகமானவை. இங்ஙனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில உலோகங்களையும் அவற்றின் குணங்களைப்பற்றியும் இங்குக் கவனிப்போம்.

### அலுமினியம்

இவ்வுலோகம் தற்காலத்தில் சர்வ சாதாரணமாய் கையாளப்பட்டு வருகிறது. மிகவும் விலைமலிவாயும், எளிதி-

173174.

லும் கிடைக்கும் இவ்வஸ்து, சுமார் அறுபது வருஷங்களுக்குமுன் ரஸாயன சாஸ்திரிகளுக்கு மட்டும் தெரிந்த பொருளாயிருந்தது. 1869-ம் வருஷத்தில் டாக்டர் சாண்ட்லர் என்னும் அமெரிக்க ரஸாயன வித்துவான் பாரிஸ்நகருக்குச் சென்று, அப்பொழுது மிகவும் அருமையெனக் கருதப்பட்ட உலோகமான அலுமினியத்தினால் செய்யப்பட்ட நான்கு அவுன்ஸ் (3 பலம்) நிறையுள்ள சாமான் ஒன்றை 9 டாலர் அதாவது 45 ரூபாய் கொடுத்து வாங்கினாராம். எனினும் 60 வருஷத்துக்குள், அருமையெனக் கருதப்பட்ட அலுமினியம் எங்கும் மலிவாய்க் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. அலுமினியம் உலகிலுள்ள உலோகங்களில் யாவற்றையும்விட இலேசானது. ட்யூராலுமின் என்னும் அலுமினியம் கொண்ட கலப்பு உலோகம் இப்பொழுது செய்யப்படுகிறது. முழுவதும் அதனால் செய்யப்பட்ட ஆகாய விமானங்கள், மிகவும் இலேசாய் இருப்பதுடன் மிக்க பலம் கொண்டனவாயுமிருக்கின்றன என்று சோதனைகளினால் புலனாகின்றன.

## க்ரோமியம் (Chromium)

சாதாரணமாய்க் காற்றிலிருந்தால் அநேக உலோகங்கள் துருப்பிடித்தோ, அழுக்குற்றோ, கருத்தோ, தங்கள் பிரகாசத்தை இழக்கின்றன. தாமிரம், வெள்ளி, எஃகு எல்லாம் இம்மாதிரி கெடும். அவற்றால் செய்த சாமான்கள் எப்பொழுதும் பளபளப்போடு ஒளிமங்காமல் அழுக்குறாமல் இருக்கச் செய்ய நிக்கல் என்னும் உலோகத்தை அவற்றின்மேல் பூசுவது வழக்கமாயிருந்தது. க்ரோமியம் என்னும் உலோகத்தினால் பூசப்படுவது அதைக்காட்டிலும் அதிக காலம் சாமான்களை ரக்ஷிக்கின்றது என்று அறியப்பட்டிருக்கிறது. எஃகினால் செய்து, க்ரோமியம் பூசப்பெற்ற சாமான்கள் நெடுங்காலம் உழைப்பதின்றி என்றும் அழுக்கேறிக் கெடுவதில்லை. இதுகாரணம்பற்றியே வெள்ளையர் சாப்பிடுகையில் உபயோகிக்கும் ஸ்பூன், போர்க் முதலியவையெல்லாம் க்ரோமியம் பூச்சுகொண்டனவா யிருக்கின்றன.

## டங்ஸ்டன் (Tungsten)

இதுவும் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் தான். மின்சார விளக்குகளில் முதன் முதலில் கரிக்கம்பிகள் உபயோகப் படுத்தப்பட்டன. அவற்றால் வெளிச்சம் அதிகம் ஏற்படவில்லை. பின்னர் ப்ளாடினம் என்னும் உலோகத்தால் செய்யப்பட்ட கம்பிகள் உபயோகப் படுத்தப்பட்டன. அவை வெளிச்சம் அதிகம் கொடுத்தாலும் டங்ஸ்டனைப்போல் அவ்வளவு சுலபமாய் ஒளியுமிழ்வனவாயும், நீண்ட காலம் உழைப்பனவாயும் காணப்படவில்லை. இப்பொழுது செய்யப்படும் மின்சார விளக்குகள் (பல்புகள்) எல்லாம் அநேகமாய் டங்ஸ்டன் கம்பிகளாலானவை.

இவ்வுலோகம் இவ்வளவு அதிகமாய் உபயோகப்படினும், வருஷத்தில் 100 டன் எடை கொண்ட டங்ஸ்டனே கிடைக்கிறது. மின்சார விளக்குகளின்றி இன்னும் அநேகம் உபயோகங்கள் டங்ஸ்டனால் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கா தேசத்துக் கைத்தொழிலும் வியாபாரமும் டங்ஸ்டனால் பன்மடங்கு அதிகரித்துள்ளன வென்று ஒரு ரஸாயன ஆசிரியர் சொல்லுகிறார். உலோகங்களில் இவ்வளவு உபயோகமான உலோகம் வேறில்லை என்று மற்றொரு நிபுணர் அபிப்பிராயப்படுகிறார். சமீபத்தில் நடந்த ஐரோப்பிய யுத்தத்தில் ஏற்பட்ட ஜயத்தில் பெரும்பாகம் டங்ஸ்டனால்தான் என்று கருதப்படுகிறது. டங்ஸ்டன் சேர்த்துச் செய்யப்படும் எஃகு, கரிசேர்த்து செய்யப்படும் எஃகைக் காட்டிலும் பன்மடங்கு பலம் உள்ளது. டங்ஸ்டன் எஃகால் செய்யப்படும்கருவிகள் சீக்கிரம்மழுங்கா. அவை மற்ற கடின வஸ்துக்களையும் கீறும் சக்தியுள்ளவை யாதலால், அக் கருவிகளைக்கொண்டு எளிதில் எவ்வளவோ சாமான்களைச் செய்யலாம். டங்ஸ்டன் எஃகினால் செய்த கருவிகளால் ஒரு மனிதன், கரி எஃகினால் செய்த கருவிகளால் ஐந்துமனிதர்கள் செய்யும் வேலையைச்செய்யலாம் என்று விஞ்ஞானிகள் நிர்ணயித்திருக்கிறார்கள். மிகவும் பலமுள்ள கருவிகள் வேண்டிய மோட்டார் கார்செய்யும் தொழிற்சாலைகளில் டங்ஸ்டன் எஃகு கருவிகள் இல்லாவிட்டால், ஒவ்வொரு மோடார் காரும் விலையில் சுமார் ரூ. 400 ஏறிவிடும் என்று பிரபல மோட்டார் வியாபாரி ஒருவர் சொல்லுகிறார்.

இதுவன்றி இப்பொழுது எங்கும் பரவிவரும் ரேடியோவில் உபயோகப்படும் கருவிகளில் டங்ஸ்டன் முக்கியமாய் உபயோகப்படுகிறது. ஆகாய விமான 'வால்வு' களை வார்க்க டங்ஸ்டன் எஃகு உபயோகமாகிறது.

இத்தனை உலோகங்களும், குணங்களும் ஒருங்கேஅமைந்த இதனை உலகின் அதிசய உலோகம் என்று கூறுகின்றனர். மொத்தம் 3 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள டங்ஸ்டன் ஒவ்வொரு வருஷமும் தயார் செய்யப்பட்டு உபயோகப்படுகிறது.

## பெரில்லியம் (Beryllium)

இதுவும் ஓர் அரும் உலோகமாம். அலுமினியம் உலோகமென்று அதனைப் பிரித்துக் கண்டுபிடித்த வாஹ்லர் என்னும் ஜர்மனிய ரஸாயன நிபுணரே பெரில்லியத்தையும் கண்டுபிடித்தார். அப்பொழுது ரஸாயன சாஸ்திரிகள் அதனை ஓர் அபூர்வமான உலோகம் என்று கருதியதுடனின்றி அதனைப் பெருவாரியாகத் தயார் செய்ய முடியுமா என்று கவனிக்கத் தலைப்பட்டார்கள். அவர்கள் வேலை யெல்லாம் சுமார்4 ஆண்டுகள்வரை பயனற்றனவாகவே காணப்பட்டன. மற்றப் பொருள்களைப் போலின்றி இது உருக 1400 டிகிரி உஷ்ணம் வேண்டும். அவ்வளவு உஷ்ணமிருப்பினும், இதற்கெனப் புதுமாதிரியான சாதனங்களையும் முறைகளையும் கையாளவேண்டும். ரஸாயன சாஸ்திரிகளும், அறிஞர்களும் பிரான்ஸ் தேசத்திலும், ஜர்மனி தேசத்திலும் இதனைப் பிரித்துக் கண்டுபிடிக்க முயன்றும் பயனில்லாமற் போயிற்று. எட்டு வருஷங்களுக்குமுன் பெரில்லியத்தைப் போதுமான அளவு தயாரித்து அதன் குணங்களைப் பரீக்ஷித்தறிய வேண்டி ஒரு சங்கம் ஜர்மனியில் ஏற்படுத்தப்பட்டது. அக்கழகத்தினர் 4 வருஷ காலம் இடைவிடாது வெகு சிரமத்துடன் வேலை செய்து, பெரில்லியத்தைப் பிரித்து பெருவாரியாய்க் கிடைக்கும் முறை யொன்றைக் கண்டுபிடித்திருக்கின்றனர். பெரில்லியம் கொண்ட வஸ்துக்கள் சிறிது விலையுயர்ந்தனவுமானதால், அம்முறைப்படி தயார் செய்யப்பட்ட பெரில்லியம் ஒரு கிராம் 200 ரூபாய் (அதாவது தங்கத்தின் விலை போல் பத்து மடங்கு) அதிக விலையாயிற்று. அவர்களின் விடாமுயற்சியால் சுமார் 100 கிராம் பெரில்லியம் கிடைத்தது. அதனை வைத்துக்கொண்டு பல பரீக்ஷணங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுள் முக்கியமாய் 100-க்கு 2 அல்லது 3 பங்கு பெரில்லியம் கலந்த தாமிரம் எஃகினும் வலிவு கொண்டதாய் மாறுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மயிரிழை போன்று மெல்லிய பெரில்லியம் கலந்த தாமிரக் கம்பியிலிருந்து இரண்டு மனிதர்கள் அதனை அறுக்காமல் தொங்கலாமாம். மெல்லிய சுண்டுவிரல் பிரமாணமுள்ள கம்பியிலிருந்து கெடுதியின்றி, 200 டன் எடையுள்ள டிராம் வண்டியைத் தொங்கவிடலாமாம். இவ்வளவு வலிவு கொடுக்கும் இவ்வற்புத உலோகத்தின் குணங்கள் இன்னும் முற்றும் தெரியவில்லை. இதனைக் கொண்டு மிகப் பயன்களைப் பெறலாமென விஞ்ஞானிகள் எதிர் பார்க்கிறார்கள்.

வனேடியம் (Vanadium), டான்டலம் (Tantalum), மாலிப்டினம் (Molybdenum), ஸீரியம் (Cerium), ஸீஸியம் (Caesium), ஸெலீனியம் (Selenium) தால்லியம் (Thallium) இவைபோன்ற பல்வேறு அரும் உலோகங்கள் இருக்

கின்றன. இவையெல்லாம் சென்ற நூறு வருஷங்களுக்குள் தான் கண்டு பிடிக்கப்பட்டன. சமீப காலத்தில்தான் இவற்றின் குணு திசயங்களெல்லாம், ஆராய்ச்சியின் பயனுய்ப் புலப்பட்டன. இவைகளும் எவ்வளவோ சிரமமான விஷயங்களைச் சாதிக்க வல்லனவாய், அநேகம் கைத்தொழில்களில் உபயோகப்படுகின்றன. இவைகளைப்பற்றிப் பின்னர் எழுதுவோம்.

# மெய்யின்பத் துறைகள்

[ஜேம்ஸ் ஆலன் (James Allen) என்னும் பேரறிஞர் ஆங்கிலத்தில் எழுதிய "By ways of Blessedness" என்ற நூலின் மொழிபெயர்ப்பு.]

(முன் தொடர்ச்சி)

## கேடுதியைப் பாராதிருத்தல்

*"கல்போன்ற அண்டம் அன்பினுல் ஊடுருவப்படும். அன்புள்ளவன் தன் கண்கள் கட்டியிருந்தாலும் சுற்றிலும், கீழும் மேலும் தவருமல் பார்ப்பான். கண்ணைப் பறிக்கும் ஒளியைக் கடவுள் மக்கள் பேரிலும் சாத்தான் அடிமைகள் பேரிலும் அவன் வீசுகிருன். துன்பத்தையும் இன்பத்தையும் தந்திரத்தால் ஒன்று படுத்துகிருன்"*

—எமர்ஸன்.

*"நீ தவறு நினைத்தால் உன் செய்கைகளில் அதன்மாசு படிந்திருக்கும் என்று நிச்சயமாக எண்ணு—உன் எண்ணம் சரியாயிருந்தால், உன் செய்கையும் சரியாகவும், உண்மையாகவும் தூய்மையாகவும் இருக்கும்"*

—பின்கன் பூளியஸ்.

மன்னிப்பதில் அதிகமாய்ப் பழகின பிறகு, மன்னிப்பதாகிய குணத்தைச் சிறிதளவு பயின்ற பின்னர் நன்மை தீமையின் இயற்கைக் குணம் மனதில் உதிக்கிறது. மனிதன் இதயத்தில் எண்ணங்களும் (Motives) முயற்சிக்குத் தூண்டுதலும் எப்படி உண்டாகின்றன, எப்படி விருத்தியடைகின்றன, செய்கை ரூபமாக எப்படித் தோற்றுகின்றன என்றும் விளங்கும். அப்போது மனதில் ஒரு புதுக் காட்சி விளங்க ஆரம்பிக்கும். மேலான பெருமையுள்ள தெய்வீக வாழ்வு ஆரம்பிக்கும். ஏனெனில் அப்போது அவன் மற்றவர்கள் செய்கையை எதிர்ப்பதாவது வெறுப்பதாவது சரியல்ல என்றும், அப்படிப் பட்ட வெறுப்புக்குத் தன் அறியாமையே காரணம் என்றும் தான் மனவருத்தப்படுவது தவறு என்றும் அறிகிருன். அவ்வளவு தூரம் வந்ததும் அவன் பின் வருமாறு சிந்திக்கிருன்: "ஏன் இப்படி இடைவிடாமல் பதில் துன்பம் செய்வதும் மன்னிப்பதும் நிகழவேண்டும்? ஏன் இன்னொருவன் மேல் கோபம் கொண்டு நம்மைத் தொந்தரவுக் குள்ளாக்குவது, பிறகு இந்த வருத்தமும் மன்னிப்பும் ஏற்படுவது? மன்னிப்பாவது தன் கோபத்தை மீட்டுக் கொள்வதல்லவா, தன் எரிச்சலைவிட்டு விடுவதல்லவா? கோபமும் எரிச்சலும் நன்மை தருவதாயும் அவசியமாயுமிருந்தால் ஏன் அவைகளைப் பற்றி வருந்த வேண்டும்? ஏன் அவைகளை விடவேண்டும்? எல்லா எரிவந்த உணர்ச்சிகளை விட்டுவிட்டு முழுமையும் மன்னிப்பது அவ்வளவு அழகாகவும், இன்பமாகவும், அமைதி தருவதாகவும் இருந்தால், அப்படி எரிச்சலுக் குட்படாமலும், கோபத்தைக் காட்டாமலும், பிறர் செய்கைகளை எப்போதும் வெருமலும் இருந்து ஒரு மன்னிப்புச் செய்கையால் உண்டாகும் தூய்மையான நிம்மதியாய் ஆனந்தம் தரும் அன்பின் அநுபவத்தை எப்போதும் பெற்றிருந்து மற்றவன்பால் குரோதம் காட்டாதிருத்தல் அதைவிட அழகாயும் இன்பமாயும் அமைதியாயும் இருக்குமல்லவா? வேருருவன் எனக்குத் தவறு செய்தால், அவன்பால் நான் கொள்ளும் வெறுப்பு தவறல்லவா? ஒரு தப்பு இன்னொரு தப்பைச்சரியாக்குமா?



மேலும் தன் தப்பால் அவன் என்னை உண்மையாய்த் துன்பப் படுத்தினுனு, அல்லது தன்னையே துன்பப்படுத்திக் கொண்டானு? அவன் தப்பினுல் அன்றி என் தப்பினுலேயே நான் துன்பப்படவில்லையா? பிறகு நான் ஏன் கோபம் கொள்ளவேண்டும்? நான் ஏன் கெட்ட எண்ணங்களை வெறுக்கவேண்டும்?, பதிலுக்குப் பதில் செய்யவேண்டும், அவைகளைப் பாராட்டவேண்டும்? என் அகங்காரம் புண்படுத்தப்பட்டதால் அல்லவா அல்லது என் வீண் பெருமைக்குப் பங்கம் வந்ததால் அல்லவா அல்லது என் சுயநலம் தோற்கடிக்கப்பட்டதனுல் அல்லவா? என் மிருகத்தனமான உணர்ச்சிகளைக்கிளப்பிவிட்டு அவைஎன்மேலான இயல்பை ஜெயிக்கும்படி செய்ததாலா? என் சொந்த அகங்காரம் வீண்பெருமை அல்லது அடக்கமுடியாத அசுத்தமடையாதகாமத்தால் தான் இன்னொருவன் என்பால் கொள்ளும் நிலையைப்பற்றி வருத்தப்படுவது நான் என்பதை நான் உணர்வதால், நான் மற்றவன் தப்பைக் கவனியாமல் என் தப்பையே கவனித்து அகங்காரம் வீண் பெருமை காமம் முதலியவைகளைக் களைந்து இனி துன்பம் உருதபடி பார்த்துக்கொள்வது நலமல்லவா?

இப்படித் தன்னைத்தானே கேள்வி கேட்பதாலும் குரூரமற்ற எண்ணங்களாலும் கோபமற்ற நடத்தைகளாலும் அவைகளுக்குப் பதில் விளங்கும்படி செய்வதாலும் ஒருவன் குரோதத்தை ஜெயித்து அதற்குக் காரணமான அஞ்ஞானத்தை அகலவிட்டோட்டி மற்றவர்களிடம் தீமையிருப்பதைக் கவனியாமலிருக்கும் ஆனந்த நிலையைக் கடைசியில் அடைவான். பிறகு எல்லாரிடமும் நல்லெண்ணத்துடனும் அன்புடனும் அமைதியுடனும் வாழ்வான். அவன் அறியாமையையும் தப்பிதத்தையும் பார்ப்பதையும் நிறுத்த முடியாது; கஷ்டத்தையும் வருத்தத்தையும் துன்பத்தையும் பார்க்காமலிருக்க முடியாது; தூய்மை, தூய்மையின்மை, சரியானது தப்பிதமானது என்று செய்கைகளில் பேதம் உணராமலிருக்க முடியாது; ஏனெனில்குரோதத்தையும் முன்அபிப்பிராயம்கொள்வதையும் நீக்கிவிட்டபடியால், அறிவின் நிறைந்த விளக்கமான ஒளியில் அவைகள் உள்ளபடி அவைகளைக் காண்கிருன்; ஆனுல் தனக்குக் கெடுதி செய்யும் படியானது எதுவும் எந்தக்கெட்ட சக்தியும் மற்றவனிடத்தில் இருப்பதாகக்காணமாட்டான். ஆகவே அதை எதிர்த்து அழிக்க முயல்வதையும் அது நிகழவொட்டாமல் தன்னைக் காத்துக்கொள்வதையும் அறவே ஒழிப்பான். தன்மனதிவிருந்து கெடுதி என்பதை ஒழித்துவிட்டதால் அதை அவன் சரிவர உணர்ந்தபிறகு அது தன்பால் வெறுப்பு, பயம், எரிச்சல் முதலியவைகளைத் தூண்டவேண்டிய அவசியமில்லைஎன்றும் யோசனை, தயை, அன்பு முதலியவைகளையே அது தூண்டவேண்டியதென்றும் உணர்கிருன்.

தன் நாடகபாத்திரங்களில் ஒருவன் மூலமாய் "அறியாமை தவிர வேறே இருள் இல்லை" என்று ஷேக்ஸ்பியர் (ஜெகப்பிரியர்) சொல்லுகிருர். எல்லாக் கெடுதியும் அறியாமையே; மனதின் அடர்ந்த இருளே. ஒருவன் மனதிலிருந்து பாவத்தை நீக்குவது இருட்டிலிருந்து தெய்வீக ஒளிக்கு வருவது போலும். இருள் வெளிச்சமின்மையைக் குறிக்கல் போல் கெடுதி என்பது நன்மை யின்மையைக் குறிக்கும். கோபத்தை அல்லது எரிச்சலைத் தூண்டுவதற்கு ஓர் இன்மைப் பொருளில் என்ன சக்தி இருக்கிறது? உலகத்தில் இருள் இரவில் கமழும்போது அந்த இருளைத் தூஷிக்கக்கூடிய மூடன் உண்டா? அதுபோல் பாவரூபமாக வெளிப்படும் மனிதர்களின் தெய்வீக இருட்டை ஒரு ஞானி கண்டனை அல்லது தூஷணை செய்யமாட்டான். ஆனுல் அவைகளை அவன் சாந்தமாகக் கண்டித்து எங்கே வெளிச்சம் இருக்கிறது என்பதை ஒவ்வொருகால் காட்டக் கூடும்.

கெடுதி அல்லது அதற்கு மூலம் என்று நான்சொல்லும்அறியாமை இரு

வகைத்து. நன்மை தீமை அறியாமல் செய்யப்பட்ட தப்பு நடத்தை ஒன்று, அதில் ஒருவன் இச்சைப்படி செய்வதொன்றில்லை - இது உணர்ச்சியின்றி நிகழும் தவறு; பிறகு செய்யக்கூடாதென்று தெரிந்தும் செய்யப்பட்ட தவறு-இது உணர்ச்சியுடன் நிகழும் தவறு. இந்த இரண்டு தவறுகளும் அறியாமையிலிருந்து கிளம்புகின்றன; அதாவது, தப்பிதத்தின் உண்மையான தன்மையையும் அதனால் உண்டாகும் வருத்தம் தரும் பலன்களையும் அறியாமையே.

தான் செய்யக்கூடாதென்று உணர்ந்தும் அந்த வேலைகளை ஒருவன் ஏன் செய்துகொண்டிருக்கவேண்டும்? தான் செய்வது தவறு என்று தெரிந்தால் அப்போது அறியாமை எங்கேயிருக்கிறது?

அச்செய்கைகளை அவன் செய்துகொண்டிருப்பது அவைகளைப்பற்றிய அறிவு பூரணமாயில்லாததால், சில வெளி உபதேசங்களாலும் உள்ளே தன் மனசாட்சி இடம் கொடாததாலும் தான் அப்படிச் செய்யக்கூடாது என்று மாத்திரம் அவனுக்குத் தெரியும்; ஆனால் அவன் தான் செய்கிறதைச் சரியாயும் பூரணமாயும் அறிந்தவனல்ல. சில செய்கைகள் அவனுக்கு உடனே இன்பம் கொடுக்கின்றன என்று அவனுக்குத் தெரியும்; ஆகவே அந்த இன்பத்துடன் தொடரும்கஷ்டத்தைக்கொடுக்கும் மனசாட்சியையும் மீறி அவன் அந்த வேலைகளைச் செய்கிறான். அந்த இன்பம் நல்லது என்றும், திருப்தி கொடுக்கக்கூடியது என்றும், ஆகவே அதை அனுபவிக்க வேண்டுமென்றும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அந்த இன்பமும் துன்பமும் சேர்ந்தேயிருக்கின்றன என்று அவனுக்கு தெரியாது; ஆகவே ஒன்றை விட்டு இன்னொன்றை அனுபவிக்க முடியும் என்று நினைக்கிறான். மனித செய்கைகளை ஆளுகின்ற சட்டத்தைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது; தான் தவறு செய்வதால் தான் கஷ்டப்படுகிறான் என்று அவன் நினைக்கிறதில்லை. மற்றவர்கள் தவறால் அவை உண்டாயின என்றும் அல்லது கடவுளின் ஏதோ இரகசியமான ஏற்பாட்டின்படி அவை உண்டாகின்றன என்றும் அவன் நினைந்து அவைகளைப் பற்றி விசாரிப்பதும் உணர்வதும் சரியல்ல என்றுநம்புகிறான். அவன் ஆனந்தத்தைத் தேடுகிறான்; தனக்கு அதிக சுகம் தரக்கூடும் என்று நம்பும் விஷயங்களையே செய்கிறான். ஆனால் தன் காரியங்களுடன் இணைந்திருக்கும் இரகசியமானவையும் நடந்தேதீரவேண்டியவையுமாகிய பலன்களைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் நடக்கிறான்.

ஒரு கெட்ட பழக்கத்தின் அடிமையாகிய ஒருவன் என் முன்பு "அது கெட்டது என்று எனக்குத் தெரியும். அதனால் நன்மையை விடத் தீமையே அதிகமாக நேரிடுகிறது என்றும் எனக்குத் தெரியும்" என்றான். பிறகு நான் "நீ செய்வது கெடுதி என்றும் துன்பம் தருமென்றும் உனக்குத் தெரிந்தால், நீ ஏன் அதைச் செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன். அதற்கு அவன், "அது சுகம் தருவதால் நான் அதைச்செய்ய விரும்புகிறேன்" என்று பதில் அளித்தான்.

அந்தப் பழக்கம் கெட்டது என்று உண்மையாக அந்த மனிதனுக்குத் தெரியாது. அது தப்பென்று அவனுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அது தப்பு என்று அவன் உணர்ந்ததாக அல்லது நம்பினதாக நினைத்திருக்கிறான். ஆனால் உண்மையில் அது நல்லது என்று அவனுக்கு எண்ணம். அது அவன்சுகத்திற்கும் நல்வாழ்விற்கும் அனுகூலமானது என்று அவன் எண்ணுவதால் அதை அனுசரித்துக் கொண்டேயிருக்கிறான். ஒரு வஸ்து கெட்டதென்று ஒருவனுக்கு அனுபவமூலமாய்த் தெரிந்தால், தான் அதை செய்யும் போதெல்லாம் தன் மனதையோ உடம்பையோ அல்லது இரண்டையோ துன்பத்துக்குட்படுத்துகிறான் என்று தெரிந்தால், அதனால் உண்டாகும் கெட்ட பலன்கள் முழுதும் அவன் உணரும்படியாக அவனுடைய அறிவு அதைக் குறித்துப் பூரணமாயிருந்தால் பிறகு அவன் அதைச் செய்ய முடியாமலிருப்பதுடன் அதைச் செய்யவும் இஷ்டப்பட மாட்டான். அதில் முன்பிருந்த சுகமும் அவனுக்கு வருத்தமாகத் தோன்றும். ஒரு விஷப் பாம்புக்கு அழகான நிறங்கள் உள்ளன என்று எவனும் அதைத் தன் ஜோபியில் போடமாட்டான். அந்த அழகான வர்ணங்களின் நடுவே மரணம் தரக்கூடிய நஞ்சு ஒளிந்திருக்கிறதென்று அவனுக்குத் தெரியும். அதுபோல் கெட்ட எண்ணத்திலும் செய்கையிலும் மறைந்துள்ள நீங்கமாட்டாத வருத்தம் துன்பம்தரும் தன்மையை ஒருவன் சரியாக உணர்ந்தால் அவைகளைப்பற்றி நினைக்கவுமாட்டான்; அவைகளைச் செய்யவுமாட்டான். தான் முன்புஆவலுடன் தேடிய உடனே கிடைக்கக்கூடிய சுகம் கூட அதை விட்டுப் போய்விட்டது; அதன்வெளி அழகு மறைந்துவிட்டது; அதன் உண்மையான நிலையைப்பற்றி அவனுக்கு அறியாமை இனியில்லை; அது உள்ளபடியே அதைப் பார்க்கிறான்.



வேலையிலிருந்த ஓர் இளைஞன் எனக்குத் தெரியும். அவன் ஒரு மாதா கோயிலைச் சேர்ந்திருந்தும் அதில் தானாகவே மதத்தைபற்றிய பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையிலிருந்த போதிலும், பொய் சொல்லுவதும் ஏமாற்றுவதும் வேலையில் அவசியமென்றும் இல்லா விட்டால் கண்டிப்பாக அழிவுவரும் என்றும் எனக்குச் சொன்னான். அவன் பொய் சொல்வது தவறு என்று தனக்குத் தெரியும் என்றும், ஆனால் வேலையிலிருக்கும் வரைக்கும் அப்படிச்சொல்லியே வரவேண்டும் என்றும் சொன்னான். அவனை நான் கேட்டதற்கு அவன் உண்மையையும் நேர்மையையும் உத்தியோக விஷயத்தில் தான் பழக்கிப் பார்த்ததில்லை என்றும், அந்த மேலான வழியைப்பற்றி நான் நினைக்கவேயில்லை என்றும், அது மேலான வழி அல்ல என்று தான் நிச்சயமாய் நம்பியிருந்ததாகவும், அதனால் அவ்வழி கெடுதியை உண்டாக்குமோ என்று அறியத் தனக்குச் சந்தர்ப்பம் நேரிடவில்லை என்றும் ஒத்துக்கொண்டான். இங்கே அந்த இளைஞன் பொய் சொல்வது தவறு என்று உணர்ந்தவன் என்று சொல்ல முடியுமா? போதனை மூலமாய் அவன் அப்படித் தெரிந்து கொண்டான் என்று சொல்லலாம். ஆனால் உண்மையாகப் பார்த்தாலும் ஆழ்ந்துபார்த்தாலும் அவன் அப்படித் தெரிந்தவனல்ல என்று சொல்லலாம். பொய் சொல்வது தவறு என்று அவனுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது; அவன் மனசாட்சியும் அந்த போதனையை ஏற்கிறது. ஆனால் பொய்யினால் தனக்கு லாபம், செல்வம், சுகம் உண்டாகும் என்றும், நேர்மையினால் நஷ்டம், வறுமை, துன்பம் உண்டாகும் என்றும் அவன்நம்பியிருந்தான். சுருங்கச் சொல்லில் அவன் ஆழ்ந்த மனதில் பொய்சொல்வது சரியான செய்கைஎன்றும் நேர்மையாய் நடப்பது தவறான பழக்கம் என்றும் அவன் கருதியிருந்தான். பொய்யின் உண்மையான தன்மையை அவன் அறிந்தவனல்ல. அது செய்தஉடனே அதனால் குணஈனம்,சுயமரியாதைஈனம், செல்வாக்கு ஈனம், உபயோகம் மதிப்பு ஆனந்த ஈனம் நேரிடுகின்றன என்றும் அவனுக்குத் தெரியாது. அவன்கீர்த்திக்கும் இம்மை லாபத்திற்கும் செல்வத்திற்கும் பங்கம் தவறாமல்உண்டாகும் என்றும் அவனுக்குத் தெரியாது.அவன் மற்றவர்கள் சுகத்தைப்பற்றி நினைக்க ஆரம்பித்து அதனால் தான் விரும்பும் லாபத்தைத் துறந்து அதனால் உண்டாகிறதாகத் தான் பயப்படும் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள விரும்பினால்தான் மேலான ஒழுக்கத்தால் மாத்திரம் கிடைக்கக்கூடிய மெய் உணர்வு அவனுக்கு உதிக்கும். பிறகு அந்த அதிக ஆனந்தத்தை அநுபவிக்கும்போது தான் இதுவரைக்கும் தன்னையே மோசம் செய்து ஏமாற்றியிருந்தான் என்றும், தான் அதிக அறியாமையிலும் சுய மயக்கத்திலும் காலங் கழித்திருந்தான்என்றும் அவன்உணர்வான்.

எல்லாப் பாவமும் எல்லாக் கெட்ட செய்கையும் அறியாமையால் ஏற்பட்டவை என்றும், ஆகவே அவைகளை நேசத்துடன் நடத்தவேண்டுமே ஒழிய துவேஷத்துடன் நடத்தக் கூடாது என்றும் மேலேகாட்டிய இரண்டு உதாரணங்கள் இன்னும் சந்தேகம், குழப்பம் கொண்டிருக்கும் வாசகர்களுக்கு உணர்த்தலாம். அப்போது அவை ஆழ்ந்த உண்மை என அவர் அறிவர்.

கெட்ட பழக்கங்கள், பொய்போலவேதான் எல்லாப் பாவமும், அதாவது காமம், குரோதம், வயிற்றெரிச்சல், (Malice) பொறாமை, அகங்காரம், வீண்பெருமை, சுய அனுபவம், எல்லாவித சுயநலமும் உடையன. அது ஒரு தெய்வீக அந்தகாரம்-இதயத்தின் உண்மையின் ஒளியில்லாமை-அறிவு இல்லாமையின் நிலை.

தன் மனதிலேயே கெட்ட ஸ்திதியை நிவாரணம் செய்தால், கெடுதியின் நிலை நன்றாய் விளங்கும்; நம்பிக்கை அறிவுக்கு இடம் கொடுக்கும், கெடுதியை வெறுப்புடன் கண்டித்து பலமாக எதிர்க்க முடியாது. துன்பம் செய்பவனைப் பக்ஷமான தயையுடன் பார்க்கக் கூடும்.

இந்த விஷயம் மனிதனுடையசுயேச்சை என்கிற கெடுதியின் இன்னொரு கூற்றைக் கவனிக்கச் செய்கிறது. அதாவது ஒவ்வொருவனுக்கும் தன்செய்கைகளைக் கவனிக்கக்கூடிய சுதந்திரம்இருப்பதைப்பற்றிக் கவனிக்கச் செய்கிறது. மற்றவர்களிடத்தில் தப்பு கண்டு பிடிப்பவனுடன் அவர்கள் தன் வழியாக நினைக்கவும் செய்யவும் வேண்டும் என்றும், அவர்களை அப்படிச்செய்யப் பயமுறுத்த வேண்டும் என்றும் ஆசை சேர்ந்திருக்கிறது. சாதாரணமாய் மக்கள் அனுசரிக்கும் பழக்கங்களில் அதிக மயக்கத்தைக் காட்டுவது தன்நம்பிக்கையும் எண்ணமும் செய்கையுமே சரி என்பதும் அதற்கு மாறுபட்டவையெல்லாம்கெட்டதுஎன்பதும், ஆகவே, அதை பலமாகக் கண்டித்து எதிர்க்கவேண்டும் என்பதுமே. இந்தத் தப்புஎண்ணத்தால் தான் எல்லாமதவிஷயமான துன்புறுத்தலும் ஆரம்பம் ஆகின்றது. கிறிஸ்துவர்கள் எல்லா நாஸ்திகர்களையும் மிகக் கொடியவர்கள் என்றும், ஒரு கெட்ட சக்தியின் தொண்டை ஏற்றிருக்கிறார்கள் என்றும் நினைக்கிறார்கள். நாஸ்திகர்களோ கிறிஸ்துவர்கள் தங்கள் பொய்யான மூட நம்பிக்கையுள்ள கொள்கைகளால் மனித சமூகத்துக்கு அதிக கெடுதி செய்கிறார்கள் என்று பலமாய் நம்புகிறார்கள். உண்மை என்னவென்றால், இருவரும் கெட்டவர்கள் அல்ல, கெட்ட வேலையைச் செய்பவர்கள் அல்ல, ஆனால் ஒவ்வொருவரும் தம் வழியையே நாடித் தமக்குச் சரி எனத் தோன்றும் மார்க்கத்திலேயே போகிறார்கள்.

பல மதஸ்தர்களும் உலக முழுதிலும் ஒருவர்க்கொருவரைக் கண்டிப்பதிலேயே காலம் கழிக்கிறார்கள் என்பதையும், தாங்களே நல்லவர்கள், தாங்களே சரியானபடி நடக்கிறவர்கள் என்பதையும் ஒருவன் நிதானமாய் யோசித்தால் எல்லாக்கெடுதியும் அறியாமையே என்றும் பரமார்த்திக இருள் என்றும் அவன் தெரிந்து கொள்ள முடியும். அவ்விஷயத்தைப்பற்றியே சிரத்தையுடன் ஆலோசிப்பது அதிக பட்சம், தரும சிந்தனை, உள்ளுணர்வு, மன விசாலம் உண்டாக்கும் என்பதை உணரலாம்.

—"நோன்பி"

# இடையேறு

## அன்பு வேள்வி

சென்ற செவ்வாய்க்கிழமை, பகல் பன்னிரண்டு மணிமுதல், மகாத்மா காந்தி வேள்வி துவங்கியிருத்தல் அன்பர்களுக்குத் தெரியும். நமது நாட்டில் நடைபெற்ற வேள்விகள் பலசிறந்தன. அவைகளுள் இவ் வேள்வி எத்தகையது? இஃது அன்பு வேள்வியாகும். மகாத்மா காந்தி தமது உள்ளத்தைக் குழியாக்கி, உயிரை எரியாக்கி, அன்பை நெய்யாக்கிச் சிறந்ததொரு வேள்வி துவங்கி யிருக்கிறார். எரவாடா சிறையில் நிகழ்த்தப் பெற்று வரும் அவ்வேள்வியினின்றும் எழும் ஒளி உலக முழுவதும் பரவியிருக்கிறது. எத்துணையோ முனிவர்கள், எத்துணையோ ரிஷிகள், எத்துணையோ பெரியோர்கள் வேள்விகள்செய்திருப்பதாக நாம் கதைகளில் படிக்கிறோம். அவ்வேள்விகள் யாவும் மகாத்மாவின் அன்பு வேள்விக்கு ஈடாகா வென்பது வெள்ளிடைமலை. உலகோர் அனைவர் கருத்தையும் ஈர்த்துள்ள வேள்வி இஃதொன்றே யென்று அறுதியிட்டுக் கூறலாம். முன்னைநாளில் செய்யப் பெற்ற வேள்விகள் பல, பெரிதும் தன்னலத்தைப் பற்றியன என்பது, அவ்வவ் வேள்விகளின்வரலாற்றை ஆராய்ந்தால் நன்கு புலனாகும். மகாத்மா காந்தியின் வேள்வியோ தன்னலம் அற்றது. அவர் எதன்பொருட்டு இவ்வரிய வேள்வியில் இறங்கி யிருக்கிறார்? நீண்ட காலமாக இந்து மதத்தில் புகுந்து அதை எரித்துவரும் தீண்டாமைநஞ்சை ஒழிக்கவே செயற்கரும் வேள்வியில் அவர் இறங்கி யிருக்கிறார்.

தீண்டாமையை ஒழிக்கப் பலர் பல வழியில் முயன்று போந்தனர். அம் முயற்சிகள் யாவும் பயன் விளைவியாமற் போயின. மகாத்மாகாந்தி தீண்டாமையைத் தொலைக்கத் தலைப்பட்டுள்ள முயற்சி வியக்கத் தக்கது. தீண்டாமையின் பொருட்டுத் தமது ஆருயிரைத் துறக்க எவரே ஒருப்படுவார்? இவ்வுலகில் உயிரினுஞ் சிறந்த பொருள் பிறிதொன்றுண்டோ? அத்தகைய உயிரைத் தீண்டாமையின் பொருட்டு அன்புடன்துறக்க முற்பட்டுள்ள காந்தியடிகளை எவர் என்று கூறுவது? அவரை மகாத்மா என்று கூறுவதா? முனிவர் என்று மொழிவதா? இக்காலக் கிறிஸ்து பெருமான் என்று இயம்புவதா? அன்பர்களே! உன்னுங்கள். இவ்விருபதாம் நூற்றாண்டில் - இருள் செறிந்த இக்காலத்தில் - அரும் அரும் புதுமைகளெல்லாங் காணப்படும் இந்நாளில் - நமது பரத கண்டத்தில் எத்தகைய ஒரு பெரியார் தோன்றியிருக்கிறார்! இதனைப் பாரத நாட்டிற்கு உரிய பெருமை என்றே கூறலாம்.

மகாத்மாகாந்தி இங்கிலாந்தில்-வட்டமேஜை மகாநாட்டில் - பேசியபோது, "தாழ்த்தப் பட்ட வகுப்பார்க்குத் தனித் தொகுதி வழங்கப்படின், என் உயிரையும் விட்டு அதைத் தடுப்பேன்" என்று பேசியதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அப்பேச்சினை அடிகள் இப்பொழுது செயலில் காட்டப் புறப்பட்டிருக்கிறார். மகாத்மா காந்தி, சொல் வழி நடப்பவரென்பது உலகறிந்த தொன்று. பிரதம மந்திரி மக்டானல்டு பிறப்பித்த வகுப்பு அறிக்கையில் "தாழ்த்தப்பட்டவர்கள் பொதுத் தொகுதியில் கலந்து கொள்ளலாம், தனித் தொகுதியிலும் தனித்து நின்று கடனாற்றலாம்" என்று குறிப்பிட்டுள்ளார். தனித் தொகுதிக் குறிப்பை மகாத்மா விரும்பவில்லை. தாழ்த்தப் பட்டவர்களைத் தனியாகப் பிரிப்பது தீண்டாமைக்கு ஆக்கந்தேடுவதென்பதும், பிறப்பில் உயர்வு தாழ்வை நிலை நாட்டுவதென்பதும் மகாத்மாவின் கருத்தாகும். தீண்டாமைப் பேயை ஓட்டவேண்டுமென்பது மகாத்மாவின் தணியா வேட்கை. அவ்வேட்கையுடைய ஒருவர் தாழ்த்தப்பட்டோர் தனித் தொகுதியைக் கண்டதும், தமது உயிர்க்

கிறுகி தேடியாதல் தனித்தொகுதியைத் தடுத்தல் வேண்டும் என்று காலவரையின்றி உண்ணா நோன்பேற்றனர்.

மகாத்மாகாந்தியின் வாழ்வு, செயல், தொண்டு, தியாகம் முதலியவற்றைக் கூர்ந்து நோக்கின், அவைகள் யாவும் தீண்டாமைத் தொலைவிற் கென்றே அவருடனிருந்து அரும்பின என்று கூறுதற்கு இப்பொழுது இடம் நேர்ந்திருக்கிறது. மகாத்மாகாந்தி தீண்டாமையைப் பற்றிப் பன்னெடுநாள் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார். இப்பொழுது அதை அறவே தொலைக்க முற்பட்டிருக்கலை நோக்குழி அவர் சத்தியாக்கிரகப் போரைப் படிப்படியாகப் பெருக்கி, உலகுக்கு ஒருவராக விளங்கி, இப்பொழுது தீண்டாமையைத் தொலைப்பதைத் தமது வாழ்வின் இறுதித் தொண்டாகக் கொண்டனர் என்பது செவ்வனே விளங்கும். காந்தியடிகள் தமது வாழ்வில் நிகழ்த்திய பல பெருந்தொண்டுகள் யாவும் இத் தீண்டாமை போக்குந் திருத்தொண்டுக்குச் சாரம் போன்றன என்பதிற் சிறிதும் ஐயமில்லை. காந்தியடிகள் பலமுறை உண்ணா நோன்பு ஏற்றுள்ளார். அந்நோன்புகள் நாட்கணக்கில், வாரக்கணக்கில் முடிந்து போயின. இப்பொழுது அவர் ஏற்றுள்ள நோன்பிற்கோ கால எல்லை இல்லாமையை மக்கள் ஊன்றிக் கவனிப்பார்களாக. இதனால் தீண்டாமை போக்குந் திருத்தொண்டைத் தமது உயிர்த்தொண்டாகக் கொண்டே மற்றத் தொண்டுகளை அடிகள் ஆற்றிக் கொண்டுவந்தார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

பிரதம மந்திரி மக்டானல்டு தீர்ப்பு முடிந்த தொன்றன்று. அதன்கண் ஒரு குறிப்பு இருக்கிறது. "வகுப்புவாதிகள் மீண்டும் ஒன்றுபட்டு ஒருமைக் கருத்தைத் தெரிவிப்பார்களாயின், தீர்ப்பில் சில மாறுதல் செய்யக்கூடும்" என்பது அக்குறிப்பாகும். ஆதலால், இப்பொழுது தனித்தொகுதியைக்கலப்புத் தொகுதியாக மாற்றும் பொறுப்பு நம்மிடத்திலேயே இருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ? அப்பொறுப்பை எவர்மீது சுமத்தலாம்? தாழ்த்தப்பட்டோர்மீது சுமத்தலாமா? அல்லது ஜாதி இந்துக்கள் மீது சுமத்தலாமா? ஜாதி இந்துக்கள்மீதே சுமத்த வேண்டுமென்பது நமது கருத்து.

ஜாதி இந்துக்கள் தங்கள்வயத்துள்ள கோயில்களை இன்று திறந்து விடுவார்களாயின் நாளையே தீண்டாமைப் பேய் நாட்டைவிட்டு ஓடிவிடும்; மகாத்மாவின் நோன்பும்முடிவடையும். மகாத்மாகாந்தி "உயிரை விடப் போகிறேன்" என்று உண்ணா நோன்பெனும் அன்பு வேள்வியில் இறங்கியுள்ள இவ்வேளையிலும், தீண்டாமையைத் "தெய்வம்" என்றும், தீண்டாமையைச் "சாஸ்திரம்" என்றும் ஜாதி இந்துக்கள் சாற்றிக் கொண்டிருப்பது அறமா? அன்பா? அருளா என்று கேட்கிறோம். காந்தியடிகள் "தீண்டாமையை ஒழியுங்கள் ஒழியுங்கள்" என்று பேசிப் பேசிப் பார்த்தார்; எழுதி எழுதிப் பார்த்தார். ஜாதி இந்துக்கள் மனம் உருகவில்லை. இப்பொழுது அவர் தமது உயிரையே அர்ப்பணஞ் செய்ய உறுதி கொண்டுள்ளார். இன்னுமா தீண்டாமை? இன்னுமா பிடிவாதம்? இன்னுமா அறியாமை?

ஜாதி இந்துக்களே! எரவாடா சிறையில் மகாத்மா வீற்றிருக்குங் கோலத்தை உன்னுங்கள்; அவர் கொண்டுள்ள விரதத்தை எண்ணுங்கள். "உயிர்போம் வரை உண்ணாவிரதம்" என்று அவர் கூறிய உறுதிமொழியைக் கூர்ந்துகூர்ந்து சிந்தியுங்கள். அவர் ஊனுருக உளமுருக உயிருருகத் தவங் கிடக்கிறார். ஆண்டவன் ஒளி அவர் உள்ளத்தில் வீசுகிறது. அவர் நிலையை ஓர்ந்து கோயில் கதவுகளை இன்றே திறந்து தீண்டாமையை ஒழிக்க எழுங்கள்; எழுங்கள். இல்லையேல் பெரும்பழி ஜாதி இந்துக்கள் மீது சாரும். இஃது உண்மை! உண்மை!

## கோயில் நுழைவு

மகாத்மா காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டதை முன்னிட்டுப் பம்பாயில் ஒரு மகாநாடு கூடியிருக்கிறது. அதன்கண் சாதி இந்துக்களும் சாதியற்ற இந்துக்களும் சேர்ந்தே ஒற்றுமை நாடி உழைத்து வருகிறார்கள். இது காறுங் கிடைத்துள்ள செய்திகளைக்கொண்டு ஒன்றுங்கூறுதற்கில்லை.

டாக்டர் அம்பேத்கர் ஒவ்வொரு போது ஒவ்வொரு வித மனிதராக விளங்குகிறாரென்று தெரிகிறது. அவர் நிலைத்த நெஞ்சம் படைத்தவராயில்லை என்பது மட்டுஞ் செவ்வனே விளங்குகிறது. டாக்டர் அம்பேத்கர் சைமன் கூட்டத்தின் முன்னர்க் கலப்புத் தொகுதியையே வலியுறுத்திக் கூறினார். வட்டமேஜை மகாநாட்டின் தொடக்கத்திலும் அவர் கலப்புத் தொகுதியையே போற்றிப் பேசினார். அவ்வேளையில் ராவ்பஹதூர் எம். ஸி. ராஜா தனித்தொகுதியில் கருத்தைச் செலுத்தி வந்தார். பின்னே அவர், உலகப் போக்கையும், இந்தியாவின் எதிர்கால நிலையையும், நமது வகுப்பு நலனையும் உன்னிக் கலப்புத் தொகுதியில் கருத்திருத்த லானார். ஸ்ரீமான் - ராஜாவின் மாற்றங் கண்டதும் டாக்டர் அம்பேத்கர் தங்கொள்கையை மாற்றிக் கொண்டனர். டாக்டர் அம்பேத்கரின் சொந்தக் கொள்கை கலப்புத் தொகுதி என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வுண்மை அவர் தம் பேச்சுக்களான் நன்கு புலனாகிறது. ஏதோ சிற்சில காரணங்களால் டாக்டர் தங்கொள்கையை மாற்றி யிருக்கலாம். இப்பொழுது நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. மகாத்மாகாந்தி "உயிர்க்கிறுதி நேரும் வரை உண்ணாவிரதம்" என்று தவங்கிடக்கிறார். மகாத்மா முதியவர். எத்துணை நாள் அவர் தம் உடல் நிலை நோன்புக்கு இடந்தரும்? பத்து நாளுக்குமேல் இடந்தாராது என்று அறிஞர்கள் கூறுகிறார்களாம். இந்நேரத்தில் டாக்டர் அம்பேத்கர் பிடிவாதஞ் சாதித்தல் கூடாது. நாட்டிலுள்ள தாழ்த்தப் பட்ட சகோதரர்களுள் பெரும்பான்மையோர் கலப்புத் தொகுதியை வேண்டுகிறார். நெஞ்சஞ் சுழன்று கொண்டிருந்த சிலரும் மகாத்மாவின் விரதத்துக்குப் பின்னைத் தங்கருத்தை



மாற்றிக் கொண்டனர். இப்பொழுது டாக்டர் அம்பேத்கர் பிடிவாதஞ் சாதித்தல் ஜனநாயக தர்மமாகாது. தீண்டாமையை ஒழிக்க மகாத்மா காந்தியினுஞ் சிறந்த ஒருவர் நாட்டில் இல்லை என்பதை உணர்ந்து டாக்டர் அம்பேத்கர் நடப்பாராக.

டாக்டர் அம்பேத்கர் இணங்கிவரினும் வாரா தொழியினும் பிரதம மந்திரி மாக்டானல்ட் தமது தீர்ப்பை மாற்ற முன்வருதல் வேண்டும். மகாத்மாவின் விரதம் தனித்தொகுதியில் பற்றுளங் கொண்டிருந்த பலருடையஎண்ணத்தை மாற்றி யிருக்கிறது. இவ்வுண்மையை உணர்ந்து பிரதம மந்திரி மக்டானல்ட் நடப்பாராக.

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதம் நல்வழியில் முடிவுற்றாலும் அவர் தம் விருப்பம்முற்றும்நிறைவேறியதாகாது. மகாத்மா விருப்பம் முற்றும் நிறைவேற வேண்டுமேல் தீண்டாமை இந்து மதத்தினின்றும் அறவே தொலைதல் வேண்டும். "தனித்தொகுதி யொழித்துக் கலப்புத் தொகுதிக்குத் தாழ்த்தப்பட்டோர் இசைவது எனது விரத நீக்கத்துக்கு மட்டும் துணை செய்வதாகும். அவ்வளவில் எனதுஉள்ளம் நிறைவடையாது. தீண்டாமை முற்றுந் தொலைதல் வேண்டும். இந்து கோயில்களில் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் நுழைதல் வேண்டும். இன்னோரன்ன செயல்கள் நாட்டிடை நிகழ்தல் வேண்டும்" என்று மகாத்மா கூறுகிறார். மகாத்மாவின் உள்ளக் கிடக்கையைச் சாதி இந்துக்கள் கவனிப்பார்களாக.

தாழ்த்தப் பட்டவர்கள் கலப்புத் தொகுதிக்கு இசைவதாலும், அவர்கட்குச் சாதி இந்துக்கள் சட்டசபையில் பீடங்கள் அதிகம் வழங்க இசைவதாலும் தீண்டாமை போகாது. மகாத்மா தீண்டாமை ஒழிப்பதில் முழு நாட்டஞ் செலுத்தி யிருக்கிறாரென்பது அவர் தம் பேச்சாலுஞ் செயலாலுந் தெரிகிறது. காந்தியடிகள் சுதருக்கும் சத்தியாக் கிரகப்போருக்குஞ் சிறப்பாகக் கருத்துச் செலுத்தி

யதுபோலத் தீண்டாமை போக்குத் திருத்தொண்டிக்குஞ் செலுத்தப்போகி ருர். தீண்டாமையின் பொருட்டு அவர் சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்தி னும் நிறுத்துவார். சட்டமறுப்பைப் பார்க்கிலும் தீண்டாமை விலக்குச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. தீண்டாமையுள்ள மட்டுஞ் சட்டமறுப்புப் போர் ஆயிர முகங் கொண்டு நடைபெறினும் நலன் விளையாது. சுயராஜ்யம் சட்டமறுப்பிலிருக்கிறதா தீண்டாமை விலக்கலி லிருக்கிறதா என்று ஒருவர் மகாத்மாவைக் கேட்பாராயின், அவருக்கு மகாத்மா காந்தி என்ன பதிலிறுப்பார்? "சுயராஜ்யம் தீண்டாமை விலக்கலிலேயே இருக்கிறது" என்று அடிகள் பதிலிறுப்பார்.

நாட்டில் விடுதலைக்கென எழும் முயற்சிகளெல்லாவற்றையும் தீண்டாமை தடுத்துக் கொண்டே யிருக்கும் என்பதைக் காந்தியடிகள் நன்குணர்ந்திருக்கிறார். ஆதலால் அவர் இனித் தமது அரிய வாழ்வைத் தீண்டாமைப் பேயை ஓட்டுவதிலேயே கழிப்பார் என்று நம்புகிறோம். பம்பாய் மகா நாட்டின் முடிவால் மகாத்மாவின் நோன்பு முடிவடைதல் கூடும். அம்முடிவை யொட்டிக் கோயில் நுழைவுப் போராட்டந் தோன்றும். அப்போராட்டத்தால் இந்தியா சுயராஜ்யத்துக்குத் தகுதியா யிருக்கிறதா இல்லையா என்பது விளங்கும். இந்தியாவைச் சுயராஜ்யத்துக்குத் தகுதியாக்க முயல்வதே தேச பக்தியாகும். அதற்குரிய வழியாது? கோயில்களில் சாதிப் பேயை யோட்டித் தாழ்த்தப்பட்ட சகோதரர்களை நுழைய விடுவதாகும். இதற்கு வடஇந்தியாவைப் பார்க்கிலும் தென்னிந்தியாவில் தடைகள் அதிகம். தென்னிந்தியர்கள் இனிக் கண் திறந்து நடப்பார்களாக. கோயில் நுழைவுப் போர் ஓர் ஒழுங்குபட்ட முறையில் இனி நடைபெறுங்காலம் நெருங்கியிருக்கிறது. சாதி இந்துக்கள் பிடிவாதத்தை விடுத்துச் சகோதர நேயத்தில் கருத்தை இருத்துவார்களாக.

## "சுதேசமித்திரன்" பொன் விழா

தமிழ் நாட்டிலுள்ள பல பத்திரிகைகளுள் வயதிலும் செல்வாக்கிலும் பிற பேறுகளிலும் "சுதேசமித்திரன்" சிறந்த பத்திரிகை என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள். "சுதேசமித்திரன்" பத்திரிகை தோன்றிய நாள் முதல் இன்று வரை அதற்கு ஏற்பட்ட பலதிற இன்னல்களைக் கடந்து இப்பொழுது பொன் விழாவைக் காணும் பேற்றைப் பெற்றதொன்றனே அதன் மாண்பு நனி விளங்கும். தமிழ் நாட்டின் பத்திரிகை யுலகிற்குச் "சுதேசமித்திரன்" தந்தை யென்று கூறுதல் மிகை யாகாது. அப்பத்திரிகையின் பொன் விழாவைக் கொண்டாடத் தமிழுலகம் முனைந்து நிற்பது கண்டு மகிழ்வெய்துகிறோம். தமிழ் மக்கள் குடியேறியுள்ள வெளி நாடுகளிலும் அவ் விழா கொண்டாடப் பெறுதல் சிறப்பாகும். அப்பொன் விழாவில் "சுதேசமித்திர"னை ஈன்ற தாயாகிய ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும், அப்பத்திரிகையை வளர்த்த செவிலித் தாயாகிய ஸ்ரீமான் அரங்கசாமி ஐயங்காரவர்களுக்கும் தக்க முறையில் நினைவுக் குறிகள் அமைக்கவேண்டுவது தமிழ் மக்கள் கடமை என்று சொல்ல வேண்டுவதில்லை. "சுதேசமித்திரன்" பொன் விழா நாடெங்கும் இனிது நடைபெறுவதாக. "சுதேசமித்திரன்" வாழ்க.




VIJAYA RAKSHITA

**விஜய ரக்ஷித கவசம்**

நீங்கள் கவலையற்று அச்சமின்றி வாழ விரும்பினால்—, தற்கியாதியுடனும் தன சம்பத்துடனும் புத்திர சந்தானத்துடனும் ஆரோக்கிய திட சரீரத்துடனும் இருக்க எண்ணினால் நமது கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். இது, நியாயமான எக்காரியத்திலும் வெற்றியையும், தொழிலில் மேன்மையையும், குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமையையும் வேறு பல நலன்களையும் உண்டுபண்ணும்.

வெள்ளிக் கவசம் ரூபா 5. தங்கக் கவசம் ரூபா 15.

விலாசம் :—பிரபசர் - கா. கோவிந்தாச்சார்,
1/34, லஸ் சர்ச் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

# மின்சார ரசம்

மனிதர் தலைமுதல் கால்வரை வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகமெல்லாம் புகழ்பெற்றது

உள்ளுக்கும் மேலுக்கும் துளிக் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணம் பெறலாம்.

மின்சார ரசத்தினால் தீராத வியாதிகளே இல்லையென்பது பல்லாயிரக்கணக்கான ஜனங்களின் அநுபவம்

உண்மை அறிய ஒரேமுறை பரீக்ஷியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும் :—

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு. கேட்லாக் இனம்.

விலாசம் : மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்.

வித்வான்
த. சண்முகக் கவிராயரின் **மகாபாரதம் தமிழ் வசனம்**

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

## சென்னை ரிஜிஸ்டிரேஷன்

### இன்ஸ்பெக்டர் - ஜெனரல் எழுதுவதாவது :—

டாக்டர் பண்டிட், இ. எஸ். கோபன் அவர்களது காயசித்தி மகரத்வஜத்தின் பலன்களைப் பரீக்ஷிக்கும் பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. நாடிப் பரீக்ஷையில் பண்டிதருக்குள்ள திறமையையும் நான் கண்டுள்ளேன். அவர் நோய்களைக் கண்டறிவதில் அற்புதமான சாமர்த்தியம் வாய்ந்தவர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவரது காயசித்தி மகரத்வஜம் எனக்கு அதிக அனுகூலமளித்திருக்கிறது. டாக்டரின் ஸ்தாபனம் வைத்தியத் தொழில் சீரும், சிறப்பும் பெற்று விளங்க வேண்டுமென்பதே என் கோரிக்கை.

ராவ் பஹதூர் பி. வி. ஸ்ரீ ஹரி ராவ் நாயுடுகாரு.

20-தினங்களுக்கான 40-மாத்திரைகளின் விலை ரூபா. 5.

உத்தரவாத சிகிச்சை

வெண் குஷ்டம், மதுமேகம், பாரிச வாய்வு, கீல்வாய்வு, குல்மம், காச நோய், மூலவியாதி, ஸ்திரீ சம்பந்த வியாதிகள், சூதகவாயுவு, பெரும்பாடு, பெண் மலடு இவைகளுக்கு நிச்சயம் சிகிச்சை செய்யப்படும்.

கீழ்க்கண்ட இடங்களில் நேரில் கன்ஸல்ட் செய்க. அல்லது விவரமாக எழுதுக.

| தலைமை ஆபீஸ் : | பிராஞ்சு : |
|---|---|
| 44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, | 193, மவுண்ட்ரோட், |
| காலை 8-மணிமுதல் 11-மணி வரை. | மாலை 3 மணி முதல் 6 மணி வரை. |

### தமிழ்நாடு ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,

| தந்தி விலாசம் : | தபால் பெட்டி நெ. 278, | டெலிபோன். |
|---|---|---|
| "காயசித்தி" | மதராஸ். | நெ. 3767. |

---

எல்லா டாணிக்குகளுக்கும்
நம்முடைய
பெரிய தலைவன் யார் ?

## மதனமஞ்சரி

### மாத்திரையே

பெரிய தலைவன். இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, இந்திரிய ஸ்கலிதம் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தேகத்தை வஜ்ர சரீரமாக்கி விடுகின்றது. ஒரு டப்பி விலை ரூபா 1.

இனும் ! வைத்தியா வித்தியா இனும்!!

விபரம் வேண்டுவோர்
எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

மதனமஞ்சரி பார்மசி,
1/94, சைனாபஜார் ரோட், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. மலீம், K. B. அண்டு கோ.
No. 14, டத்தோகிராமட் ரோட்,
பினங்கு S. S.

---

## தேகபலம்

## புத்திர சந்தானம்

இவைகளை யடைய எங்கள்
ஆதங்கநிக்ரஹ மாத்திரைகளை
உபயோகியுங்கள்

இம்மாத்திரைகள் சென்ற 51 வரு ஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன; மேலும், தேக அசதி மலச்சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன. 32 மாத் திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1 5 டப்பிகள் ரூபா 4.

இனும் ! இனும் !

காம சாஸ்திரம்

என்னும் புத்தகம் கேட்போருக்கு இல மாகவும், தபாற் செலவில்லாமலு அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.

---



## அரிய தமிழ் நூல்கள்

| | ரூ. |
|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்).... | 3 |
| முருகவேள் பனுவல் திரட்டு .... .... .... | 1 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்) .... .... | 0 1 |
| முருகன் திருவருட்பா .... .... .... .... | 0 |
| தேவி தோத்திர மஞ்சரி .... .... .... | 0 |
| குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்) .... | 1 |
| விநாயகர் பனுவல் திரட்டு .... .... .... | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும் கிளேஸ் .... .... .... .... | 0 |
| ஷை ரப் .... .... .... .... | 0 |
| சிவபுண்ணியத் தெளிவு.... .... .... .... | 0 |
| காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன் .... .... .... .... | 0 |

## அடக்கவிலைப் பதிப்பு நூல்கள்

| | ரூ. |
|---|---|
| சம்பந்தர் தேவாரம் ... ... | 1 |
| அப்பர் தேவாரம் ... ... | 0 1 |
| சுந்தரர் தேவாரம் ... ... | 0 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ... ... | 0 1 |
| திருவாசகம் ... ... ... | 0 2 |
| தாயுமானர் பாடல் ... ... | 0 |
| திரு அருட்பா—(பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு) 5-வது திருமுகப் பகுதி ... ... | 0 |

## கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து
சிவத்தியானனந்த மஹரிஷி யவர்கள் எழுதிய

### கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவர வில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

இதற்கு ஒரு
வட்டமேசை
மகாநாடு
வேண்டுமா
?
வரைறிந்த
உண்மை
யாயிற்றே!

ருக்மணி
குக்கர் அடு
க்கு
சமையலுக்கு நிகரற்றது.
1, 2, 4, 6, 8, 12, 14 பேர்
களுக்கு ஏழு அளவுகள்
ரூ. 10-8, 14, 18, 23, 29
35, 41. விபரபுத்தகம் இனம்.

இன்றே
எழுதுக.
ருக்மணி
குக்கர்
கம்பெனி,
இராயபுரம், (3)
சென்னை.

## வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்பு உருக்கி, சீதபேதி, [illegible] சம்பந்தமான பெரும்பாடு எல்லாம் தீரும். [illegible] மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம்:—
செ. விசுவநாத செட்டியார்,
வைத்தியம், [illegible]குடி, திருச்சி ஜில்லா.

## பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களாலும், அபிரிக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் [illegible] பத்திரங்களும் அளிக்கப்பெற்ற [illegible] கம் கணிக்க ரூபா 5. 1 வருஷ [illegible] எழுத ரூபா 5. எதிர்காலத்தைப்பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை).

பண்டித ஜாதக:
ம. ஸ்ரீநிவாசாச்சாரியார்,
1/34, [illegible]
மயிலாப்பூர், சென்னை.

## தாது புஷ்டிக்கு
### மன்மத குளிகை

வாலிபப் பருவத்தில் முறைதவறிய தீச்செயல்களால் நீங்கள் இழந்த பலம், தாது நஷ்டம், போகசக்திக் குறைவு, மன உற்சாகம் இவைகளைத் திரும்பக் கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விருத்தி முதலியவைகளையுண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

20 குளிகை ரூபா. 2.
வி. பி. செலவு வேறு.

C. மலையப்பசாமி,
[illegible] வைத்தியசாலை, பழனி. S.I.

## காரைக்காலம்மையார் திருப்பாடல்கள்

திரு. வி. க. இயற்றிய
அரும்பதவுரையுடன்
விலை அணா 6.

ஆனந்தா பி
ஆனந்த அச்சுயந்திர
73-வருட
பஞ்சாங்கம்
விலை ரூபா 1.
முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை.


22

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

# இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண்ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா ?

## வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை .... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு .... .... .... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் .... .... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் .... .... | 2 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் .... .... .... | 0 | 8 |
| சைவத்திறவு .... .... .... .... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானரும் .... .... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... .... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து .... .... | 0 | 8 |
| நாயன்மார் .... .... .... .... | 0 | 3 |
| சைவ சமய சாரம் .... .... .... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் .... .... | 0 | 6 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் .... .... .... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்.... .... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் .... .... .... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணி யார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ... | 5 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ... | 1 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ... | 1 | 6 |
| குருதேவர் வாக்கியம் ... ... | 0 | 5 |
| நமது தாய்நாடு ... ... | 0 | 8 |
| பக்தியோகம் ... ... | 0 | 10 |
| கர்மயோகம் ... ... | 0 | 12 |
| சிகாகோ பிரசங்கம் ... ... | 0 | 5 |
| விவேகானந்தரின் கடிதங்கள் ... | 0 | 8 |
| எனது போர் முறை ... ... | 0 | 2 |
| பவ்ஹாரி பாபா ... ... | 0 | 3 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை ... | 0 | 13 |
| பக்தி மார்க்கம் ... ... | 0 | 2 |
| முக்திநெறி ... ... | 0 | 5 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் | 0 | 2 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை.

---

# கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.


Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.